## அத்தியாயம் 7

# திருமணத்தைக்குறித்த போதனைகள்

பவுல் கொரிந்தியருக்கு எழுதின முதலாம் நிருபத்தின் முதல் ஆறு அதிகாரங்களில், சபையில் தோன்றியிருந்த குழப்பங்களைக் குறித்த நம்பத்தகுந்த தகவல்களை அறிந்து அதைக்குறித்து உரையாற் றினார். 6-ம் அதிகாரத்தின் முடிவில் அப்போஸ்தலர் விவாதித்த விஷயங்களில் ஒன்று மக்கள் தங்கள் சரீர இச்சைகளை திருப்தி செய்ய வேண்டும் என்பதே. “நல்லது என்று தோன்றினால், அதை செய்யுங்கள்,” என்பது 1960 களில் மற்றும் 70 களின் ஹிப்பி தலைமுறைக்கு முன்னால் நீண்ட காலமாக இருந்த ஒரு கோஷம். கிரேக்க மற்றும் ரோம தத்துவவாதிகள் பல நூற்றாண்டுகளாக நல்ல வாழ்க்கைக்கு செல்லும் பாதை திருப்தியுணர்வைத் திருப்தி செய்வது என்று வாதிட்டனர். வாழ்க்கையில் தெய்வீக வழிகாட்டுதல் இல்லையெனில், உயர்வான முடிவுகள் இல்லை, மிஞ்சியிருப்பது வெறும் ஆசைகளே. கொரிந்துவில் சிலர் அதுபோன்ற தத்துவ சிந்தனைகளை தங்கள் கிறிஸ்தவ வாழ்வில் மெல்ல மெல்லத் தழுவினர். “வயிற்றுக்குப் போஜனமும் போஜனத்திற்கு வயிறும்” என்ற கோஷத்திற்கு அவர்கள் முத்திரை பெற்றனர் (6:13), ஆனால் இந்த கோஷம் உண்மையில் போஜனத்தைப் பற்றியதல்ல. பசி சாப்பிட தூண்டுவது போல பாலியல் ஆசையும் அதை செயல்படுத்த தூண்டும் என்பதே வாதம்.

கொரிந்துவிலுள்ள சிந்தனைக்கு இணையான மற்றொரு கருத்து என்னவெனில் கிறிஸ்தவர்கள் தங்கள் சரீர இச்சையை கட்டுப் படுத்த வேண்டும் என்பதாகும். கிரேக்க-ரோம கலாச்சாரத்தில் இந்த துறவற தத்துவமும் ஒரு வரலாற்றைக் கொண்டிருந்தது. துறவறம் என்பது துறவி தன் சொந்த நலனுக்காக தன்னை மறுக்கிறார், மற்றவர்களுடைய நலனுக்காக அல்ல. உதாரணமாக, உபவாசம் என்பது ஆன்மீக ரீதியிலான அல்லது சரீர ரீதியில் ஏதோ ஒரு நன்மைக்காகவே தன் சுயத்தை வெறுக்கிறார்; பொதுவாக பட்டினியால் வாடும் ஒருவருக்கு உணவு கொடுக்கும் நோக்கத்தில் ஒருவர் உபவாசிப்பது இல்லை. அவ்வாறே, கொரிந்துவில் உள்ள சிலர் ஆசைகளை அடக்குவது, குறிப்பாக பாலியல் ஆசையை, ஒரு விசுவாசிக்கு நன்மையளிக்கும் என்ற கருத்தை கொண்டிருந்தனர். பல நூற்றாண்டுகளாக, சில மதங்கள் பாலியல் தீமையானது என்று

தீர்மானித்திருந்தன.

ஒழுக்கமுறைமையை குறித்த கேள்விகள் எழுந்தபோது, பவுல் சமரசமற்றவராக இருந்தார். கொள்ளை அல்லது தூஷணம், உதாரணமாக, எப்போதும் தவறானது; ஆனால் சில நடத்தைகளை சூழ்நிலையோடு ஒட்டி பார்க்க வேண்டும் என்று அப்போஸ்தலர் தெளிவுபடுத்தினார். பெருந்தீனி அல்லது வேசியோடு இசைவது பாவமானதாக இருந்தாலும், மிதமாக சாப்பிடுவது அவசியம் மற்றும் திருமணத்தில் பாலியல் உணர்வை தேவன் ஆசீர்வதித்திருக்கிறார். 6-ம் அதிகாரத்தில் உள்ள பவுலின் கரிசனைகள் 7-ம் அதிகாரத்தின் திருமணம் சார்ந்த அறிவுரைகளிலும் இயல்பாக தொடர்கிறது. எந்த விதமான இன்பத்திற்கும் சரீரத்தை ஒப்படைப்பது இயல்பாகவே தவறானது என்று நம்பியவர்கள் மீது அப்போஸ்தலர் கவனம் செலுத்த வேண்டிய நேரம் வந்துவிட்டது. சுருக்கமாக, அவர் பின்வருமாறு பதிலளித்தார்: கணவர்களுக்கும் மனைவிகளுக்கும் இடையே உள்ள பாலியல் உறவு தேவனால் அங்கீகரிக்கப் படுகிறது. அது தீமையானது அல்ல.

## இன்பம் அனுபவித்தல் அல்லது சுயவெறுப்பு (7:1-7)

பவுல் கொரிந்து பட்டணத்தை விட்டுச்சென்ற சில வருடங்களுக்கு முன்னர், 1 கொரிந்தியர் நிருபத்தை எழுதுவதற்கு முன்பு, கிறிஸ்தவர்கள் ஒரு வகையில் குழப்பத்திற்கு பங்களித்த உள்ளூர் தீர்க்கதரிசிகளை தவிர வேறு வழிகாட்டுதலின்றி இருந்தனர் (காண்க 14:22-25). பல்வேறு கருத்துரைகளின் ஆதரவாளர்களிடையே உட்பூசல் ஏற்பட்டது; மற்றும் பிரபலமான தத்துவம், சந்தேகத்திற்கு இடமின்றி, சபையின் மோதல்களுக்கு காரணமாயிற்று.

கருத்து வேற்றுமை ஏற்பட்டபோது, பவுல் மிகவும் அருகில் இருக்கிறார் என்று அறிந்தார்கள், எபேசு பட்டணத்திலும் கூட பவுல், உண்மையில், ஏற்கனவே ஒரு நிருபத்தை எழுதி அவர்களுடன் தொடர்பை தொடங்கியிருந்தார் (5:9). வழிகாட்டுதல் கள் கோரி, கிறிஸ்தவர்கள் பவுலுக்கு திரும்ப கடிதம் எழுதினார்கள். பவுலுக்கு அனுப்பிய கடிதத்தை எழுதியது யார் என்பது தெரியவில்லை. பவுலிடம் அதை வழங்கிய மூன்று பிரதிநிதிகள் அதை எழுதியிருக்கலாம், அல்லது ஒரு குழு அதை உருவாக்கியிருக்கலாம். அக்கடிதத்தின் அடிப்படை பொருளடக்கம் பவுல் எழுதிய 1 கொரிந்தியர் மறு மொழி நிருபத்தின் மூலம் தீர்மானிக்கப் படுகிறது.

**1நீங்கள் எனக்கு எழுதின காரியங்களைக் குறித்து நான் எழுதுகிறதென்னவென்றால், ஸ்திரீயைத் தொடாமலிருக்கிறது மனுஷனுக்கு நல்லது. 2ஆகிலும் வேசித்தனம் இராதபடிக்கு அவனவன் தன் சொந்த மனைவியையும், அவளவள் தன் சொந்தப் புருஷனையும்**

**உடையவர்களாயிருக்கவேண்டும். 3புருஷன் தன் மனைவிக்குச்
செய்யவேண்டிய கடமையைச் செய்யக்கடவன்; அப்படியே
மனைவியும் தன் புருஷனுக்குச் செய்யக்கடவள். 4மனைவியானவள்
தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல, புருஷனே அதற்கு அதிகாரி;
அப்படியே புருஷனும் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல, மனைவியே
அதற்கு அதிகாரி. 5உபவாசத்திற்கும் ஜெபத்திற்கும் தடையிராதபடிக்கு
இருவரும் சிலகாலம் பிரிந் திருக்கவேண்டுமென்று சம்மதித்தாலன்றி,
ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாதிருங்கள்; உங்களுக்கு விரதத்துவம்
இல்லாமையால் சாத்தான் உங்களைத் தூண்டிவிடாதபடிக்கு,
மறுபடியும் கூடி வாழுங்கள். 6இதை நான் கட்டளையாகச்
சொல்லாமல், யோசனையாகச் சொல்லுகிறேன். 7எல்லா மனுஷரும்
என்னைப் போலவே இருக்க விரும்புகிறேன். ஆகிலும் அவனவனுக்குத்
தேவனால் அருளப்பட்ட அவனவனுக்குரிய வரமுண்டு; அது
ஒருவனுக்கு ஒருவிதமாயும், மற்றொருவனுக்கு வேறுவிதமாயும்
இருக்கிறது.**

**வசனங்கள் 1, 2.** கடிதத்தை தொடர்ந்து எழுதுகையில் சபையிலிருந்து எழுந்த மற்ற கேள்விகளை அடையாளம் காண காரியங்களைக் **குறித்து** என்னும் சொற்றொடரை பவுல் தனது கடிதத்தில் பயன் படுத்தினார் (7:25; 8:1; 12:1; 16:1). இங்கே, அது திருமணம் பற்றிய அவருடைய விவாதத்தை அறிமுகப்படுத்துகிறது. கொரிந்துவில் இருந்த சிலர் அவருடைய பரிசுத்தம் பற்றிய போதனைக்கு அப்பால் சென்று கிறிஸ்தவர்கள் எல்லா சூழ்நிலைகளிலும் பாலியல் உறவுகளிலிருந்து விலகியிருப்பது மிகச் சிறந்தது என்று வலியுறுத்தினார்கள்.

6:12, 13ல் பயன்படுத்தப்பட்ட அதே அணுகு முறையை பின்பற்றி, "ஸ்திரீயைத் தொடாமலிருக்கிறது மனுஷனுக்கு நல்லது" என்னும் வார்த்தைகளை NRSV இன் மொழிபெயர்ப்பாளர்கள் மேற் கோள் குறிப்பில் வைத்தார்கள். மொழிபெயர்ப்பு பணியில் ஒரு குறிப்பிட்ட அளவில் விளக்கம் தேவைப்படுகிறது, மற்றும் அவர்களுடைய தீர்ப்பில் பவுல் மேற்கோள் காட்டிய இந்தச் சொற்றொடர் சில கொரிந்திய விசுவாசிகளால் பயன்படுத்தப்பட்ட ஒரு கோஷமாக இருந்தது. வாதத்தின் ஒரு பக்கத்தில் இருந்தவர்கள் "எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரம் உண்டு" (6:12) மற்றும் "வயிற்றுக்குப் போஜனமும் போஜனத்திற்கு வயிறும்" (6:13) போன்ற கோஷங்களை பயன்படுத்தி தங்கள் சிற்றின்ப பசியை தீர்ப்பதில் தவறில்லை என்று நியாயப்படுத்தினார்கள். மற்றவர்கள் **ஸ்திரீயைத் தொடாமலிருக்கிறது மனுஷனுக்கு நல்லது**[1] என்ற கோஷத்தை பயன் படுத்தி தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினர். முதல் இரண்டு கோஷங்களும் பாலியல் சிற்றின்பத்தை ஆதரிக்கிறது; ஆனால் மூன்றாவது கோஷம் ஒரு

துறவற வாழ்க்கை முறைக்கு அழைப்பு விடுக்கிறது. இந்த சொற்றொடர்களை NRSV இன் மொழி பெயர்ப்பாளர்கள் மேற்கோள் குறிப்பில் வைத்திருப்பது சரியானதே என்று சந்தர்ப்பம் குறிப்பிடுகிறது.

"ஸ்திரீயைத் தொடுதல்" என்பது பாலியல் உறவை குறிப்பிட அப்போஸ்தலர் பயன்படுத்திய நாசுக்கான சொல்முறை ஆகும். சிற்றின்ப ஈடுபாடு மற்றும் சுயவெறுப்பு போன்றவைகளை குறித்த விவாதம் சபையில் தீவிரமடைந்தது தெளிவாகிறது. இந்தப் பிரச்சனையை தீர்த்து வைக்கும் படி பவுல் அழைக்கப்பட்டார். யாருடைய வாதம் சரியானது? சிற்றின்ப ஈடுபாட்டை ஆதரித்தவர்களை குறித்த உரையை ஏற்கனவே தந்த பவுல் அப்போஸ்தலர் இப்போது தன் கவனத்தை துறவறத்திற்குத் திருப்புகிறார். அவர் முன்பு செய்ததைப் போலவே (6:12, 13), பவுல் அக்கோஷத்தை மேற்கோள்காட்டி அது ஒரு குறிப்பிட்ட அளவு உண்மையை வெளிப்படுத்துகிறது என்று ஒப்புக்கொண்டார், ஆனால் அது முழு உண்மையை வெளிப்படுத்தவில்லை என்று வலியுறுத்தினார்.

சபையில் காணப்பட்ட விவாதங்கள் வெறும் கோஷங்களாக மாறியது, ஆனால் அக்கோஷங்களில் அடிப்படை கருப்பொருளை குறித்த ஒரு கேள்வி காணப்பட்டது: "திருமணம் பாராட்டத்தக்கதா, அல்லது கிறிஸ்தவர்கள் பிரம்மச்சாரியாக இருக்கவேண்டுமா?" இந்த கேள்வி இன்னும் பரந்த அளவில் கூறப்பட்டிருக்கலாம்: "பாலியல் சிற்றின்பத்தைவிட பாலியல் வெறுப்பு எப்போதும் விரும்பத்தக்கதா?" பவுல் இந்த விஷயத்தை எளிதாக எடுத்தார், ஆனால் இறுதியில் திருமண உறவிற்குள்ளாக பாலியலின் நன்மையை உறுதிப்படுத்தினார். எல்லா சூழ்நிலைகளிலும் பாலியலுக்கு விலகியிருத்தல் ஒரு நல்லொழுக்கம் என்று வாதிடுவதற்கு அவர் மறுத்து விட்டார். பதிலாக, அவர் எழுதினார், **... அவனவன் தன் சொந்த மனைவியையும், அவளவள் தன் சொந்தப் புருஷனையும் உடையவர்களாயிருக்க வேண்டும்** (7:2).

"ஸ்திரீயைத் தொடாமலிருக்கிறது மனுஷனுக்கு நல்லது" (7:1) என்ற சொற்றொடரின் நன்மைகள் எதுவாக இருந்தாலும், சரீரரீதியான இச்சை வலுவாக இருப்பதால், ஒழுக்கக்கேடு ஏற்படுகிறது என்று வெளிப்படையாக பவுல் சுட்டிக் காட்டினார். அவருடைய வாதம் என்னவெனில், விபசாரிகளோடு இசைந்திருத்தல் (6:15) அல்லது மனைவியிடம் இசைந்திருப்பது போன்ற இவ்விரண்டிற்கும் இடையே ஒரு விருப்பத்தேர்வு என்று ஒன்று வந்தால், திருமணம் ஒன்றே கிறிஸ்தவ வழிமுறை. ரிச்சர்டு பி. ஹேஸ் (Richard B. Hays) என்பவர் 1 மற்றும் 2 வசனங்களை பின்வருமாறு குறிப்பிட்டு தன்னுடைய குறிப்புகளை இற்றலிக்ஸ் எழுத்துக்களில் எழுதினார்:

இப்போது நீங்கள் எழுதின விஷயங்களைப் பற்றி நான்

> பதிலளிக்கிறேன். *நீங்கள் முன்மொழிகிறதாவது, பரிசுத்தம் மற்றும் தூய்மையின் நிமித்தம், திருமணமான தம்பதிகள் உடலுறவு கொள்ளாமல் இருக்க வேண்டும்.* நீங்கள் சொல்வது போல், "ஸ்திரீயை மனுஷன் தொடாமலிருக்கிறது ஒரு நல்ல விஷயம் தான்." ஆனால் - *அது சாத்தியமில்லாதது என்பதால்* - ஒவ்வொரு புருஷனும் தன் மனைவியோடு உடலுறவு கொள்ளவேண்டும், அப்படியே ஒவ்வொரு மனைவியும் தன் சொந்த புருஷனுடன் உடலுறவு கொள்ளவேண்டும்.[2]

இந்த பொழிப்புரை பவுலுடைய அறிவுரையின் கருப்பொருளை பறைச்சாற்றுகிறது. ஒழுக்கமின்மையை கட்டுப்படுத்துகிற முயற்சி செய்பவர்களுக்கும் மற்றும் உண்மையுள்ள திருமண உறவிற்குள்ளான உடலுறவு தேவனுடைய ஆசீர்வாதம் என்று எண்ணுகிறவர்களுக்கும் உரிய மரியாதையைக் கொடுத்து ஜாக்கிரதையோடு காண்பிக்கிறார்.

இந்த வேதபகுதியை புரிந்துகொள்ள 1 தெசலோனிக்கேயர் 4:1-8ல் பவுல் கொடுத்திருக்கும் அறிவுரைகள் உதவிசெய்கின்றன. Wayne A. Meeks சுட்டிக்காட்டியதாவது, இரண்டு வேதபகுதியிலும் பொதுவிதி "*porneia* [வேசித்தனம்] வை தவிர்க்கவும், இவ்வார்த்தை எல்லா விதமான சட்டவிரோத பாலியல் உறவுகளை குறிப்பிடுகிறது." அவர் எழுதியதாவது, "ஒருவனுக்கு ஒருத்தி என்னும் கொள்கையை பவுல் காலத்து கிறிஸ்தவர்கள் புரிந்து கொண்டுள்ளார்கள் என்பதை இவ்விதி காட்டுகிறது, ஹெலனிஸ்டிக் மற்றும் ரோமானிய காலத்து யூதர்கள் ஏற்றுக் கொண்டதுபோல, வேசித்தனத்தை [*porneia*] தவிர்ப்பதற்கான நெறிமுறை மற்றும் சாதாரண வழிமுறையாக கருதப்பட்டது."[3] பவுலுடைய விவாதம் ஒரு அறிவுசார்ந்தது என்பதைக்காட்டிலும் உணர்வு சார்ந்தது என்று எஃப். எஃப். ப்ரூஸ் (F. F. Bruce) சொல்வது சரியானது. "பாலியல் முறை கேடுகளை தவிர்ப்பதைத் தவிர [திருமணத்திற்கு] வேறு உயர்ந்த நோக்கம் எதையும் காண முடியாது"[4] என்று பவுலுடைய வார்த்தைகள் பொருள்படவில்லை. பாலியல் மற்றும் திருமண உறவு குறித்த பவுலின் அறிவுரைக்கு தொடக்க புள்ளி யாதெனில் ஒரு ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் இடையிலான திருமண உறவு வாழ்நாள் முழுவதற்குமான அர்ப்பணிப்பை உள்ளடக்கியதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது என்பதாகும். திருமணத்திற்குள், அன்பு, உடமைகள், மற்றும் ஆதரவு போன்றவைகளை கணவனும் மனைவியும் அனுபவிக்கிறார்கள் (காண்க எபே. 5:25).

**வசனம் 3.** கணவன் மற்றும் மனைவிக்கு இடையே உள்ள கடமையில் பாலியல் வெளிப்பாடு மனித தேவைகளிலேயே மிக அடிப்படையானதாக கொடுக்கப்படாமலிருந்தாலும், இருப்பினும் அது முக்கியமானது. கணவர்கள் மற்றும் மனைவிகள் தங்கள் திருமண உறவின் பாலியல் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு ஒருவருக்கொருவர் பரஸ்பர கடமை இருக்கிறது என்று பவுல் கூறினார். பாலியல் உறவிற்கு விலகி இருத்தல் கணவன் அல்லது மனைவியுடைய ஒரு

தனிப்பட்ட முடிவு அல்ல. **புருஷன் தன் மனைவிக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்யக்கடவன், அப்படியே மனைவியும் தன் புருஷனுக்குச் செய்யக்கடவள்**, என்று பவுல் எழுதியபோது, அவர் பொருள் கொண்டது என்னவெனில் கணவர்களும் மனைவிகளும் ஒருவரையொருவர் கருத்தில் கொண்டு செயல்படவேண்டும். ஒரு நபருடைய சரீரம் அந் நபருடைய துணைக்கு ஒரு கடமைக்காக மட்டும் கொடுக்கப்பட வேண்டும் என்று அவர் பரிந்துரை செய்யவில்லை. ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான பாலியல் உறவை நிறைவேற்றுதலை திருமண உறவில் தேவன் ஆசீர்வதிக்கிறார் என்று பவுல் உறுதிப்படுத்துகிறார்.

**வசனம் 4.** கணவனுக்கோ அல்லது மனைவிக்கோ தங்கள் சொந்த சரீரத்தின் மேல் முழு அதிகாரம் இல்லை என்னும் பவுலுடைய வலியுறுத்துதல் முதல் நூற்றாண்டில் கிரேக்க-ரோம சமுதாயத்தில் வாழ்ந்தவர்களுக்கு விநோதமானது என்பதில் சந்தேகமில்லை. அவர்களின் ஆண் ஆதிக்கம் கொண்ட புறஜாதி கலாச்சாரத்தில், கணவன் தன் மனைவியின் சரீரத்தின் மீது அதிகாரம் உடையவர் என்று எடுத்துக் கொண்டார்கள். மனைவியும் தன் கணவரின் சரீரத்தின் மேல் அதிகாரம் உடையவர் என்பதை ஏற்றுக் கொள்வது அவர்களுக்கு கடினமாக இருந்தது.

அப்போஸ்தலருடைய போதனை கணவனுக்கும் மனைவிக்கும் சமஉரிமையை வழங்கியது: **மனைவியானவள் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல ... அப்படியே புருஷனும் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல.** ஒருவரை திருமணம் செய்து கொள்வதென்பது அந்நபருடன் ஒரே மாம்சமாக இருப்பதாகும். இது தன்னைத்தானே ஒப்படைத்து தன் வாழ்க்கைத்துணை தன்னில் ஒரு பகுதி என்று உரிமை கோருவதாகும். திருமணத்தில் ஒருவர் தன்னுடைய சரீரத்திற்குரிய பிரத்தியேக உரிமையை தன் துணைக்குக் கொடுப்பதாகும். பாலியல் வெளிப்பாடு பரஸ்பரமானது; வழங்குவதற்கு அல்லது தடைசெய்வதற்கு இது ஒரு தயவு அல்ல. கணவன் மற்றும் மனைவி ஆகிய இருவரும் தங்கள் தேவைகளையும் ஆசைகளையும் கருத்தில்கொண்டு உரிய மரியாதை அளிப்பது அடிப்படை ஆகும்.

**வசனம் 5.** இந்த கொள்கைகளை மனதில் கொண்டு, பவுல் ஒரு நேர்மையான ஒரு தடையை கிறிஸ்தவர்களுக்கு முன்வைத்தார்: **ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாதிருங்கள்.** இத்தடையை குறைந்த பட்சம் இரண்டு வகைப்படுத்தலாம். தடைசெய்யப்பட்டதை தொடங்காமலிருப்பதற்கு மற்றவர்களுக்கு கொடுக்கப்பட்ட கட்டளையாக இருக்கலாம், அல்லது ஏற்கனவே அவர்கள் செய்து கொண்டிருப்பதை நிறுத்துவதற்கான கட்டளையாக இருக்கலாம். இரண்டு வகையான தடைகளும் கிரேக்க மொழியில் மிகத் தெளிவாக

வேறுபடுத்தி காட்டப்பட்டுள்ளது. ஆங்கிலம் அப்படிக் காட்டவில்லை. கொரிந்தியர்கள் செய்துகொண்டிருந்தவைகளை நிறுத்தும்படி பவுல் அவர்களுக்குச் சொன்னார் (μὴ ἀποστερεῖτε, *mē apostereite*). கணவர்கள் அல்லது மனைவிகள் ஒருவருக்கொருவர் உள்ள உரிமைகளை எந்த அளவு நிறுத்தி வைத்திருந்தார்களோ, கிறிஸ்தவர்களால் ஏற்றுக்கொள்ள இயலாத வழிகளில் தங்களை நடத்திக்கொண்டிருந்தார்கள். மணவாழ்க்கையின் உறவில் கிறிஸ்து எந்த கட்டுப்பாடுகளையும் வைக்கவில்லை. பாலியல் உறவு என்பது இயல்பாகவே தீமையானதோ அல்லது பலவீனமானதோ அல்ல. பாலியல் உறவு பரஸ்பர அன்பை பகிர்ந்து கொள்ளவும் இனப்பெருக்கம் செய்யவும் தேவன் கணவனுக்கும் மனைவிக்கும் கொடுத்த பரிசு.

பொது விதிக்கு விலக்கான ஒன்று அப்போஸ்தலரின் மனதைக் குறுக்கிட்டது. **ஜெபத்திற்கு** தங்களை அர்ப்பணிக்கும்படி ஒரு தம்பதியர் பாலியல் உறவுகளுக்கு சிலகாலம் விலகியிருக்க **சம்மதித்தால்**, அவர்கள் அப்படிச் செய்யலாம். இது கொரிந்துவில் உள்ள சில திருமணமான தம்பதியரின் பழக்கமாக இருந்ததால் பவுல் இந்த விதிவிலக்கை கொண்டு வந்தார். அத்தகைய ஒப்பந்தத்தில் அவர் எந்தத் தீங்கையும் காணவில்லை; உண்மையில், அது தம்பதியரை இன்னும் நெருக்கமாக தேவனோடும் ஒருவருக்கொருவருடன் பிணைக்கும்.

ஒரு கிறிஸ்தவ திருமணத்தின் தம்பதியர் இரு தரப்பினரும் ஒருதலைப்பட்சமாக பாலியல் தொடர்பைத் தவிர்ப்பதை பவுல் தடை செய்தார். சம்மதத்தை ஆவிக்குரிய வளர்ச்சிக்கான காரணம் என்று அவர் மாற்றியமைத்தார். 7:2ல் அவர் வைத்த குறிப்புக்கு கவனத்தை திருப்பி விஷயத்தை சொல்லி முடித்தார். பெரும்பாலான ஆண்களுக்கும் பெண்களுக்கும் தேவன் சக்தி வாய்ந்த பாலியல் விருப்பத்தை அல்லது உந்துவிசையை கொடுத்திருக்கிறார். ஒருவரும் அதை அற்பமாக எண்ணக்கூடாது. சாத்தான் இந்த உந்துதலைப் பயன் படுத்தினான், மிகவும் மோசமான சுய அழிவை ஏற்படுத்துகிற பாவத்திற்கு தேவ மக்களை கவர, மேலும் தொடர்ந்து அதை பயன்படுத்துவான். அவர்கள் ஜெபநேரம் முடிந்தவுடனே, இருவரும் மீண்டும் **கூடிவாழவேண்டும்**. அப்படிச் செய்ய தவறுவது, ஏனெனில் அவர்களுக்கு **விரதத்துவம் இல்லாதபடியால்** எதிரி சாத்தான் அவர்களைத் **தூண்டிவிட** அனுமதிக்கும்.

**வசனம் 6.** பவுல் விளக்கம் அளித்ததாவது, **இதை நான் கட்டளையாகச் சொல்லாமல், யோசனையாகச் சொல்லுகிறேன்.** “இதை” என்னும் வார்த்தை திருமணத்தைக்குறித்த பவுலுடைய ஆலோசனைகளை குறிப்பிடுகிறது. அப்படியானால், “ஆலோசனை” என்று பவுல் குறிப்பிடுவதாவது கிறிஸ்தவர்கள் திருமணம் செய்துகொள்ளலாம் அல்லது திருமணம் செய்யாமலிருக்கலாம்,

"அவனவனுக்கு கொடுக்கப்பட்ட வரத்தைச்" சார்ந்து (7:7). கிட்டத் தட்ட, "இதை" என்னும் வார்த்தையைக்கொண்டு ஜெபத்திற்கு நேரம் செலவிடும்படி கிறிஸ்தவ தம்பதியர் ஒருவருக்கொருவர் சிலகாலம் பிரிந்திருக்கிற விஷயத்தை பவுல் குறிப்பிடுகிறார். இந்த பழக்கத்தை அப்போஸ்தலர் கட்டளையாகவும் தரவில்லை, பாராட்டவும் இல்லை.

அப்போஸ்தலர் தன்னுடைய கருத்தை தெளிவு படுத்த விரும்பினார். மணவாழ்க்கையில் தன் துணையிடமிருந்து பாலியல் உறவிற்கு விலகி இருப்பது பரிசுத்தத்தின் அடையாளம் அல்ல, அங்ஙனம் விலகியிருத்தல் தேவனுடைய தயவையோ, ஜெபத்திற்கான மறு உத்தரவையோ கொண்டு வருவதில்லை. தம்பதியர் பரஸ்பர சம்மதத்தின் பேரில் சிலகாலம் பாலியல் உறவிற்கு விலகியிருப்பது முழுமையாக அவர்களுடைய தனிப்பட்ட விஷயம். இந்த பழக்கத்திற்கு பவுல் "கட்டளையாக அல்ல ஆலோசனையாக" அனுமதி கொடுக்கிறார். அங்ஙனம் விலகியிருப்பதினால் ஜெபம் அதிக பலன் தருகிறது என்பது உண்மையாக இருக்கவேண்டிய அவசியமில்லை. திருமணத்தின் நெருங்கிய உறவு உட்பட திருமணமானது கௌரவமான, பரிசுத்தமான வாழ்க்கை முறை, என்பதை பவுலுடைய எல்லா வார்த்தைகளும் தாராளமாக தெளிவுபடுத்துகிறது.

**வசனம் 7. எல்லா மனுஷரும் என்னைப் போலவே இருக்க விரும்புகிறேன்**, என்று பவுல் எழுதியபோது, புரிந்து கொள்ளக்கூடிய வகையில் அவரைப்போலவே எல்லாரும் திருமணமாகாதவராக இருக்க வேண்டுமென விரும்பினார். திருமண உறவின் பரிசுத்தத்தை நியாயப்படுத்திய பின்னர் ஏன் இத்தகைய அறிக்கையை அவர் வெளியிட்டார்? பெரும்பாலான மக்களிடம் பாலியல் சோதனைகள் மிகவும் வலுவாக இல்லை என்று ஒருவேளை அப்போஸ்தலர் அர்த்தம் கொண்டிருக்கலாம். இது மிகவும் தெளிவாக உள்ளது: பவுல் தன்னுடைய முந்தைய குறிப்பிலிருந்து பின் வாங்கவில்லை. குடும்ப வாழ்க்கைக்கு இடையூறான காரியங்கள் கிறிஸ்துவுடனான விசுவாசம் மற்றும் திருமணத்தில் உண்மையில்லாமை இவைகள் ஒன்றாக இணைந் திருப்பது கடினம் என்று பவுல் குறிப்பிட்டார். **அவனவனுக்குத் தேவனால் அருளப்பட்ட அவனவனுக்குரிய வரமுண்டு; அது ஒருவனுக்கு ஒரு விதமாயும், மற்றொருவனுக்கு வேறு விதமாயும் இருக்கிறது**, என்று அவர் சொன்னபடியால், பாலியல் வெறுப்புக்கான திறன் இல்லாத யார் மேலும் அப்போஸ்தலர் ஆவிக்குரிய எந்த நிழலையும் காட்டவில்லை என்பது தெளிவாகிறது. மணவாழ்க்கைக்கு விலகியிருத்தல் ஒருவர் அதிக அர்ப்பணிப்போடு தேவனுக்கு பணிவிடை செய்ய இடம் தருகிறது, ஆனால் ஒருவருக்கு நடைமுறைக்கு சாத்தியமான ஒரு விஷயத்தை எல்லாரும் நடை முறைப்படுத்த வேண்டும் என்ற அவசியமில்லை. ஏறக்குறைய, கொரிந்துவில் உள்ள கிறிஸ்தவர்கள் மேல் இருந்த அழுத்தங்கள்,

அத்தகைய சூழ் நிலையில் திருமணம் செய்து கொள்ளாமல் இருப்பது நல்லது என்று பவுலை எண்ணங் கொள்ளச் செய்தது (காண்க 7:26).

இந்த விஷயத்தைக்குறித்த பவுலுடைய கடைசி போதனையில், இரண்டு குறிப்புகளுக்கு முக்கியத்துவம் தேவை. (1) பாலியல் ஆசையை தேவன் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தந்திருக்கிறார். அது இனப்பெருக்கத்திற்கென்று கொடுக்கப்பட்ட வல்லமை வாய்ந்த உந்துதல், அது மட்டுமல்லாமல் உளவியல் மற்றும் உணர்வு தேவைகளையும் அதினால் தேவன் சாத்தியமாக்குகிறார். (2) வேறொரு நபரின் பாலியல் சுரண்டலுக்கு உள்ளாவது அல்லது பாலியல் ஆசைகளை திருப்திபடுத்த வேறொரு நபரை பயன் படுத்துவது ஒரு கிறிஸ்தவருக்கு ஏற்றதல்ல. சரீரம் தேவனுடைய ஆலயமாக இருப்பதினால் (6:19; காண்க 3:16), அதை தூய்மையானதாக வைத்துக் கொள்ள வேண்டும் (காண்க 1 தெச. 4:3ஐ).

## “திருமணமாகாதவர்கள்,” “விதவைகள்,” மற்றும் “திருமணமானவர்கள்” போன்றவர்களுக்கான ஆலோசனைகள் (7:8-11)

கொரிந்துவில் உள்ள பிரத்தியேகமான சூழ் நிலைகளை மனதில்கொண்டு, திருமணம் செய்து கொள்ளாமலிருப்பது நல்லது என்னும் பொதுவான விதியை பவுல் கூறினார் (காண்க 7:27). அதே வேளையில், சமுதாய, ஆவிக்குரிய, மற்றும் உளவியல் சார்ந்து மக்களிடம் காணப்பட்ட வேறுபாடுகளை அவர் பார்க்கிறார் (7:7). திருமணம் பாவமானது என்று அவர் சொல்லவில்லை; திரு மணத்தில் பாலியல் உறவு பாவமல்ல. ஒருவர் கிறிஸ்த வராகும்போது என்னென்ன சமுதாய அந்தஸ்தை உடையவராக இருக்கிறாரோ அவைகளில் அவர் தொடர்ந்து நீடிப்பது மிகச்சிறந்தது என்ற கருத்தை அப்போஸ்தலர் வலியுறுத்தினார். 7:17-24ல் பொதுவிதியை அவர் விரிவுபடுத்துகிறார். திருமண மானவர்களோ அல்லது திருமணம் ஆகாதவர்களோ, அழைக்கப் பட்ட அழைப்பில் அவர்கள் உறுதியாக இருப்பது கிறிஸ்தவர் களுக்கு சிறந்தது (7:24). ஒருவருடைய வெளியரங்கமான அந்தஸ்தைவிட அவர் தேவனோடு பெற்றிருக்கிற உறவே மிக முக்கியமானது. இரட்சிப்பு, நித்திய வாழ்வுக்கான நம்பிக்கை, இவ்வுலக காரியங்களை குறித்த புதிய பார்வையைத் தருகிறது. இந்த பரந்த மனப்பான்மைக்குட்பட்டு, திருமணமாகாதவர்களுக்கும் மற்றும் திருமணமானவர்களுக்கும் பொருந்துகிற குறிப்பிட்ட அறிவுரைகளுக்கு பவுல் தன்னுடைய கவனத்தை திருப்புகிறார்.

**8விவாகமில்லாதவர்களையும், கைம்பெண்களையும் குறித்து நான்**

**சொல்லுகிறது என்னவென்றால், அவர்கள் என்னைப்போல இருந்துவிட்டால் அவர்களுக்கு நலமாயிருக்கும். [9]ஆகிலும் அவர்கள் விரத்தராயிருக்கக்கூடாதிருந்தால் விவாகம் பண்ணக்கடவர்கள்; வேகிறதைப்பார்க்கிலும் விவாகம் பண்ணுகிறது நலம். [10]விவாகம் பண்ணிக்கொண்டவர்களுக்கு நானல்ல, கர்த்தரே கட்டளையிடுகிறதாவது: மனைவியானவள் தன் புருஷனை விட்டுப்பிரிந்து போகக்கூடாது. [11]பிரிந்து போனால் அவள் விவாகமில்லாதிருக்கக்கடவள், அல்லது புருஷனோடே ஒப்புரவாகக்கடவள்; புருஷனும் தன் மனைவியைத் தள்ளிவிடக் கூடாது.**

**வசனம் 8.** 7:25-31ல் திருமணமாகாத கன்னிகைகளுக்கும் 7:39, 40ல் விதவைகளுக்கும் பவுல் உரையாற்றினார். இந்த சந்தர்ப்பத்தில் **திருமணமாகாதவர்களுக்கு** (τοῖς ἀγάμοις, *tois agamois*) மற்றும் **விதவைகளுக்கு** அவர் ஏன் அறிவுரை வழங்கினார்? அநேகமாய் கொரிந்திய கிறிஸ்தவர்கள், இன்றைய கிறிஸ்தவர்களைப் போல, பல்வேறு காரணங்களுக்காக "திருமணம் செய்து கொள்ளாமல்" இருந்திருக்கலாம் என்று அவர் கருதினார். சிலர் ஒரு வேளை திருமணம் செய்து கொள்ளாத இளைஞர்களாக இருந்திருக்கலாம்; ஆனால் மற்றவர்கள் விவாகரத்து செய்யப் பட்டிருக்கலாம், அல்லது சிலருடைய வாழ்க்கைத் துணை இறந்திருக்கலாம். கொரிந்துவில் திருமணமாகாத எல்லோரும் கன்னியர் அல்ல, ஆனால் அப்போஸ்தலரின் மனதில் ஒரு குறிப்பிட்ட திருமணமாகாதவர்கள், கன்னியர் அல்லாதவர்களின் கூட்டம் இருந்தது என்று நம்புவதற்கு காரணம் உண்டு. "விதவைகளுக்கான" அறிவுரைகளைக் கொண்டு திருமணமாகாத வர்களுக்கு பவுல் போதித்தது தற்செயலானதா? அநேகமாய் இல்லை. கன்னியர்களுக்கும் விதவைகளுக்கும் பின்னர் தனியான அறிவுரைகளை பவுல் வழங்கியபடியால், இந்த சூழ்நிலையில் திருமணமாகாதவர்கள் மற்றும் விதவைகள் என்று பவுல் குறிப்பிடுபவர்கள் வாழ்க்கைத் துணையை இழந்த ஆண்கள் அல்லது பெண்கள் ஆக இருக்கலாம். "திருமணமாகாதவர்" என்பது ஒரு வேளை மனைவியை இழந்தவரை குறிக்கிறது. அப்படியானால், 7:7ல் சொன்ன யோசனையை பவுல் மீண்டும் சொன்னது ஏன் என்பதை புரிந்து கொள்வது எளிது. திருமணமாகாதவர்களுக்கும் விதவைகளுக்கும், அவர் எழுதினார், **... அவர்கள் என்னைப்போல இருந்து விட்டால் அவர்களுக்கு நலமாயிருக்கும்**, அதாவது, தனியாக.

**வசனம் 9.** இந்த நேரத்தில் விதவைகளும் மனைவியை இழந்தவர்களும் திருமணமாகாதவர்களாக இருக்க வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருந்தாலும், அவர்கள் திருமணம் செய்து கொள்வதும் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கது. பல சந்தர்ப்பங்களில், இச்சையடக்கம் இல்லாமை மிகுதியான பாவத்திற்கு இட மளிக்கிறது. கலாத்தியர் 5:23

இல் உள்ள ஆவியின் கனிகள் மற்றும் 2 பேதுரு 1:6ல் உள்ள கிறிஸ்தவ நல்லொழுக்கங்களின் பட்டியல் இவைகளில் பொதுவான இரண்டு பண்புகளில் ஒன்று "சுய கட்டுப்பாடு" (ἐγκράτεια, *engkrateia*) ஆகும்.[5] சுய கட்டுப்பாடு இல்லாத திருமணமாகாத ஒருவர் திருமணத்திற்கு வெளியே பாலியல் வெளிப்பாட்டைத் தேடிக்கொள்ளலாம், அது நிச்சயமாக பாவமாக இருக்கும்.

வாழ்க்கைத்துணையை இழந்துபோன ஆண்களுக்கும் பெண்களுக்கும் பவுல் உரையாற்றியிருந்தால், ஆண்களில் சிலர் வேசிகளோடு இசைந்து, ஆசைகளை தீர்க்க ஏற்றுக்கொள்ள தகாத வழியாய் இருந்தது (காண்க 6:15-20), இச்சையடக்கத்தை இழந்தது வெளிப்படையாகத் தெரிகிறது. இச்சையடக்கம் உள்ளவர்கள், திருமணமாகாமல் இருப்பது நல்லது. அவர் பின்னர் சொன்னார், **வேகிறதைப் பார்க்கிலும் விவாகம் பண்ணுகிறது நலம்.** NASB மொழிபெயர்ப்பு "உணர்ச்சியோடு" என்ற வார்த்தையை இற்றலிக்ஸ் இல் தருவது இந்த வசனத்தை புரிந்து கொள்ள சிறந்த வழி என்று மொழிபெயர்ப்பாளர்கள் நம்புகிறார்கள், ஆனால் மற்றொரு வாய்ப்பு உள்ளது. அக்கினி மற்றும் எரிதல் பெரும்பாலும் வேத வாக்கியங்களில் நியாயத்தீர்ப்புடன் தொடர்புடையது (பார்க்கவும், உதாரணமாக, மத். 3:11, 12). மனைவியை இழந்தவர்கள் உணர்ச்சிகளால் தூண்டப்படுவதினால் தேவ உறவில் இருந்து பிரிக்கப்பட்டு தீவிரமான நியாயத்தீர்ப்பை விளைவிக்கும். பாலியல் பாவங்களைச் செய்கிறவர்கள் உணர்ச்சிகளால் மேற் கொள்ளப்படுவதைக் காட்டிலும் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று பவுல் சொன்னார். இந்த சூழ்நிலையில், அப்போஸ்தலரின் அக்கரையானது ஆசைகளால் பற்றியெரிகிற இளைஞர்களை குறித்தது மட்டுமல்லாமல் இச்சையடக்கம் இல்லாத வயது முதிர்ந்தவர்களையும் குறித்தது ஆகும். பாலியல் சோதனைகள் பிரத்யேகமாக இளைஞர் களுக்குரியது மட்டுமல்ல.

**வசனங்கள் 10, 11.** மனைவியை இழந்தவர்கள் மற்றும் விதவைகள் மீண்டும் திருமணம் செய்து கொள்வதைக் குறித்த கர்த்தருடைய அறிக்கையை பவுல் அறிந்ததாக இல்லை, ஆனால் திருமணத்தின் நிரந்தரம் குறித்த வெளிப்படையான அறிவுரைகளை கர்த்தர் கணவர்கள் மற்றும் மனைவிகளுக்கு தந்திருக்கிறார். திருமணமானவர்கள் தங்கள் திருமண ஒப்பந்தங்களை கைவிடக் கூடாது. **மனைவியானவள் தன் புருஷனை விட்டுப் பிரிந்துபோகக் கூடாது. புருஷனும் தன் மனைவியைத் தள்ளி விடக்கூடாது.**

**கர்த்தருடைய** ஆலோசனையை பவுல் மேற்கோளாக சொன்னவைகளையும் மற்றும் பவுல் ஒரு அப்போஸ்தலனாக சொன்ன ஆலோசனைகளையும் வேறுபடுத்தி அறிய கிறிஸ்தவர்கள் ஜாக்கிரதையுடையவர்களாக இருக்க வேண்டும். ஆவியானவரால்

வழிநடத்தப்பட்ட, அப்போஸ்தலருடைய வார்த்தைகள் விசுவாசிகளுக்கு அதிகாரப்பூர்வமானதாக காணப் பட்டது (காண்க 7:40). அவருடைய கடிதங்களில், தெய்வீக அறிக்கைகள் இல்லாதபடியால் அவைகள் அதிகாரபூர்வமானது அல்ல என்று சபை எண்ணக் கூடாது.

கணவனோ அல்லது மனைவியோ ஒருவர் மட்டும் கிறிஸ்தவராக இருந்தால் அவர்களுக்குரிய ஆலோசனைகளை அப்போஸ்தலர் பின்பு தந்திருக்கிற படியால் (7:12-16), வசனங்கள் 10 மற்றும் 11 இல் திருமணமானவர்களுக்கு என்று பவுல் உரை யாற்றியிருப்பது கிறிஸ்தவ தம்பதியருக்கு என்பது தெளிவாகிறது. திருமணவாழ்வில் கணவனோ அல்லது மனைவியோ மற்றொருவரை தள்ளி விடக் கூடாது (7:11). விவாகரத்து பின்பற்ற வேண்டிய ஒரு வழி முறை அல்ல. திருமணத்தை விட பிரமச்சாரி யாக இருப்பது பரிசுத்தமானது ஆகையால் விவாகரத்து பரிந்துரைக்கத்தக்கது என்று ஒருவர் கருதினால் அது தவறு. திருமணமும் திருமணபடுக்கையும் பரிசுத்தமானது (காண்க எபி. 13:4).

திருமணங்களை பாதுகாக்க வேண்டும் என்று வகைப்படுத்திச் சொன்ன பின்பு, திருமணம் செய்து கொள்ளுகிற போது மக்கள் சில நேரங்களில் தவறுகள் செய்கிறார்கள் என்று அப்போஸ்தலர் ஒப்புக் கொள்கிறார். அசாதாரண சூழ்நிலைகளில், விவாகரத்தை பரிந்துரை செய்யலாம் என்று அப்போஸ்தலர் ஒப்புக்கொள்கிறார்; ஆனால் மீண்டும் திருமணம் செய்வதை அவர் ஆதரிக்கவில்லை என்பதை தெளிவாக சுட்டிக்காட்டுகிறார்: **பிரிந்துபோனால் அவள் விவாகமில்லாதிருக்கக்கடவள், அல்லது புருஷனோடே ஒப்புரவாகக்கடவள்.** கணவனை விட்டுச் சென்ற மனைவி தனியாகவே வாழ வேண்டும் அல்லது கணவனோடே ஒப்புரவாக வேண்டும். அப்போஸ்தலர் இவ்விதிக்கு எந்த விலக்கும் அளிக்கவில்லை. மனைவிக்கு சொல்லப்பட்ட அதே விதி கணவனுக்கும் பொருந்தும். இருவருக்கும் சமஅளவிலான உரிமை உண்டு என்று உரையாற்றினார்.

## அவிசுவாசியை திருமணம் செய்துகொண்ட விசுவாசிக்கு சொல்லப்பட்ட ஆலோசனை (7:12-16)

கிரேக்க உலகின் ஆண் ஆதிக்கம் நிறைந்த சமுதாயத்தில், குடும்பத்தின் தந்தையின் மதமானது சாதாரணமாக குடும்பத்திலுள்ள அனைவருக்கும் - மனைவி, குழந்தைகள், மற்றும் அடிமைகளுக்கும் மதமாக மாறியது. கொர்நேலியு (காண்க அப். 10:24, 48) மற்றும் பிலிப்பி பட்டணத்து சிறைச்சாலைக்காரன் (அப். 16:33) ஆகியோர்கள் தங்கள் குடும்பத்துடன் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர். சாதாரண கிரேக்க மதத்தின் எல்லைக்குள், ஒரு நபரோ அல்லது ஒரு குடும்பத்தாரோ ஒரு புதிய தெய்வத்தை ஏற்றுக் கொள்வது அது சிறிய

விஷயம், ஏனென்றால் பவுல் இந்த கடிதத்தின் பிந்திய பகுதியில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார், "... அநேக தேவர்களும் அநேக கர்த்தாக்களும் அங்கே உண்டு" (8:5). அத்தகைய சமுதாய அமைப்பில், ஒவ்வொருவரும் ஒரே மாதிரியான பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிக்கும் வரையில் கணவர்களும் மனைவிகளும் வித்தியாசமான தெய்வங்களைத் தேர்ந்தெடுப்பது வழக்கமானது. கிரேக்க-ரோம மதங்களில், எந்த ஒரு தெய்வமும் மற்ற தெய்வங்களிடமிருந்து பிரத்தியேகமானவர் அல்ல.

கிறிஸ்தவ மதம் தோன்றிய காலத்தில், அம்மதம் அதிக எதிர்ப்புகளை சந்தித்ததற்கான ஒரு காரணம் இயேசு கிறிஸ்துவின் தந்தை ஒருவரைத் தவிர வேறொருவரும் தேவன் அல்ல என்று சொன்னதே. ஒருவர் இயேசு கிறிஸ்துவைச் சேவித்தால், மற்ற எல்லா தெய்வங்களையும் தவிர்த்துவிடவேண்டியது கட்டாயமான ஒன்று. கிறிஸ்தவர்கள் முன்பு ஆராதித்துவந்த சந்தை வெளி தேவாலயங்களை இகழ்ந்தனர். சமூக பங்கேற்புக்கு அழைத்த தெய் வங்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட பண்டிகைகளை கிறிஸ்தவர்கள் ஒதுக்கிவிட்டனர். கிறிஸ்தவர்களுக்கு, புறஜாதி தெய்வங்களின் ஆலயங்கள் பிரபலமான கற்பனையில் வெட்கக்கேடாக இருந்தது. இந்த எல்லா காரணங்களுக்காக, திருமண உறவில் ஒருவர் மட்டுமே கிறிஸ்தவராக இருந்தால், கணவன் மற்றும் மனைவிக்கு இடையே உள்ள பதட்டத்தின் வீரியம் ஒரே மதத்தை பகிர்ந்து கொண்ட கணவன் மற்றும் மனைவிக்கு இடையே உள்ள பதட்டத்தைவிட அதிகமாக இருக்கும். கிறிஸ்துவின் மூலம் தேவனிடம் திரும்புவது மற்றொரு தேவனை கூடுதலாக சேர்ப்பது அல்ல.

திருமணமாகாத ஒருவர் "கர்த்தரில் மட்டுமே" (7:39) திருமணம் செய்துகொள்ளும்படியான பவுலின் ஆலோசனையை நிச்சயமாக பின்பற்ற வேண்டும்; ஆனால் சில நேரங்களில் புறஜாதி திருமணத்தில் ஒருவர் மட்டும் கிறிஸ்தவரானால், மற்றவர் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள மறுத்து விடுகிறார். இது பல கேள்விகளை எழுப்பியது. ஒருவர் கிறிஸ்தவரான போது ஆனால் கணவனோ அல்லது மனைவியோ புறமதத்தில் நீடித்தால், குழப்பங்களை தவிர்க்கும்படி கிறிஸ்தவரான நபர் தன் புறமத வாழ்க்கைத் துணையை தள்ளிவிடுவது பரிந்துரைக்கத்தக்கதா? விக்கிரகாராதனைக்காரருடனான நெருக்கமான உறவினால் ஒரு கிறிஸ்தவரின் பரிசுத்தம் கறை படுகிறதா? இந்த கேள்விகளுக்கு வெளிப்படையாக பவுல் விளக்கமளித்தாரா இல்லையா என்பது முக்கியமல்ல. கொரிந்திய கிறிஸ்தவர்கள் வாழ்ந்த சமுதாய சூழ்நிலை பவுல் அவைகளை சமாளிக்க வேண்டிய கட்டாயத்தை எற்படுத்தியது.

**12மற்றவர்களைக்குறித்துக் கர்த்தர் அல்ல, நானே சொல்லு கிறதாவது: சகோதரனொருவனுடைய மனைவி அவிசுவாசி யாயிருந்தும்,**

**அவனுடனே வாசமாயிருக்க அவளுக்குச் சம்மத மிருந்தால், அவன் அவளைத் தள்ளிவிடாதிருக்கக்கடவன். [13]அப்படியே ஒரு ஸ்திரீயினுடைய புருஷன் அவிசுவாசி யாயிருந்தும், அவளுடனே வாசமாயிருக்க அவனுக்குச் சம்மதமிருந்தால், அவள் அவனைத் தள்ளிவிடாதிருக்கக்கடவள். [14]என்னத்தினாலெனில், அவிசுவாசியான புருஷன் தன் மனைவியால் பரிசுத்தமாக்கப்படுகிறான்; அவிசுவாசியான மனைவியும் தன் புருஷனால் பரிசுத்தமாக்கப்படுகிறாள். இல்லா விட்டால் உங்கள் பிள்ளைகள் அசுத்தமாயிருக்குமே; இப்பொழுதோ அவைகள் பரிசுத்தமாயிருக்கின்றன. [15]ஆகிலும் அவிசுவாசி பிரிந்து போனால் பிரிந்து போகட்டும், இப்படிப்பட்ட விஷயத்தில், சகோதரனாவது சகோதரியாவது அடிமைப்பட்டவர்களல்ல. சமா தானமாயிருக்கும் படிக்கே தேவன் நம்மை அழைத்திருக்கிறார். [16]மனைவியானவளே, நீ உன் புருஷனை இரட்சிப்பாயோ அல்லவோ உனக்கு எப்படித் தெரியும்? புருஷனே, நீ உன் மனைவியை இரட்சிப்பாயோ அல்லவோ உனக்கு எப்படித் தெரியும்?**

**வசனம் 12.** திருமணத்தின் இரு பங்காளர்களும் கிறிஸ்தவர்களாக இல்லாதபோது, திருமணத்தில் அவிசுவாச பங்காளருக்கான கிறிஸ்தவ பங்காளரின் கடமை குறித்து கிறிஸ்துவின் போதனைகளில் நேரடியாக சொல்லப்படவில்லை. இருப்பினும், ஆவியானவருடைய வழிநடத்துதலைச் சார்ந்து (2:13), தேவையான சூழ்நிலைக்கு கர்த்தருடைய செய்தியை நீட்டிக்க பவுல் தயங்கவில்லை. தேவனுடைய சொந்த வெளிப்பாடு அப்போஸ்தலனுடைய வார்த்தைகளுக்குப் பின்னாக உள்ளதுபோல இயேசுவின் வார்த்தைகளுக்குப் பின்னாலும் இருக்கிறது.

அப்போஸ்தலர் ஏற்கனவே கிறிஸ்தவர்களிடையிலான திருமணம் பற்றி விவாதித்திருந்தார் (7:10, 11). கூடுதலாக, “திருமணமாகாதவர்கள் மற்றும் விதவைகளுக்கு” (7:8, 9) அவர் ஆலோசனை கொடுத்தார். **மற்றவர்கள்** எனப்படுகிறவர்கள் அவிசுவாசிகளை திருமணம் செய்துகொண்டவர்கள். உத்தேசமாக, யூதர்களை திருமணம் செய்து கொண்ட கிறிஸ்தவர்களுக்கும் அப்போஸ்தலருடைய போதனைகள் பொருந்தும்.

அவிசுவாசிகளை திருமணம் செய்துகொண்ட விசுவாசி களுக்காக அப்போஸ்தலர் 7:10, 11ல் சொன்ன முதல் வார்த்தைகளை மீண்டும் வலியுறுத்துகிறது: மனைவியானவள் தன் கணவனை தள்ளிவிடக் கூடாது (“அவள் அவனைத் தள்ளி விடாதிருக்கக்கடவள்”; 7:13), மற்றும் கணவனும் தன் மனைவியை தள்ளிவிடக்கூடாது. இருப்பினும், திருமண உறவை பராமரிப்பதில் இருதரப்பினருடைய சம்மதமும் அவசியம் என்பதை பவுல் கண்டு கொண்டார். பவுலுடைய காலத்தில், திருமணம் மற்றும் விவாகரத்து போன்ற விஷயங்களில் அரசின்

தலையீடு இன்றைய காலத்தைவிட குறைவாகவே காணப்பட்டது. டேவிட் ஈ. கர்லேண்ட் இவ்வாறு குறிப்பிட்டார், "திருமணம் செய்துகொள்வதற்கான சம்மதத்தை இருதரப்பினரும் பரஸ்பரமாக தள்ளிவிட்டாலும் அல்லது ஒருவர் மட்டுமே தன்னுடைய சம்மதத்தை நிராகரித்தாலும் திருமணம் முடிவுறுகிறது. கணவனோ அல்லது மனைவியோ வெறுமனே திருமணத்தை முடிவுக்கு கொண்டுவரும் நோக்கத்துடன் வீட்டை விட்டு வெளியே சென்றால் போதும்."[6]

**வசனம் 13.** அவிசுவாசியான மனைவியை திருமணம் செய்துகொண்ட விசுவாசியான கணவனுக்கு பவுல் வழங்கிய ஆலோசனை நேர் எதிர் சூழ்நிலைக்கும் சமமாகப் பொருந்தும். விசுவாசிக்கிற கணவன் அல்லது மனைவி தங்கள் துணைவர் அவிசுவாசியாக இருந்தாலும் திருமண உறவில் தொடரவேண்டும். பவுல் அதை எதிர்மறையாக சொன்னார், கணவன் அவிசுவாசியான மனைவியை "தள்ளிவிடக்கூடாது" (μὴ ἀφιέτω, *mē aphietō*; 7:12), மற்றும் மனைவியானவள் **அவளுடைய அவிசுவாசியான கணவனை தள்ளிவிடக்கூடாது** (μὴ ἀφιέτω, *mē aphietō*). இரண்டு சொற்றொடர்களும் ஒரே கிரேக்க வார்த்தைகளின் மொழிபெயர்ப்பாகும்.

**வசனம் 14.** திருமணத்தில் விசுவாசமில்லாத வாழ்க்கைத்துணை விசுவாசியான வாழ்க்கைத் துணையால் **பரிசுத்தமாக்கப்பட்டதாக** பவுல் குறிப்பிட்டார். இது அடைப்புக்குறியில் சொல்லப்பட்ட ஒரு கருத்தாக இருக்கலாம், ஆனால் சந்தர்ப்பம் இது ஒரு கற்பனையான சூழ்நிலை அல்ல என்பதைக் காட்டுகிறது. ஒரு கிறிஸ்தவரின் சரீரம் "பரிசுத்த ஆவியின் ஆலயம்" என்று அப்போஸ்தலன் கொரிந்தியர்களிடம் கூறினார் (6:19). விபச்சாரியோடு இசைவதை அவர் தடை செய்தார் ஏனெனில், மற்ற பல காரியங்களுடன், வாடிக்கையாளர் "அவளுடன் ஒரே சரீரமாகிறார்" (6:16). அவிசுவாசியான ஒரு துணையுடன் ஒரு கிறிஸ்தவர் பாலியல் உறவு வைக்கும்போது, அவன் அல்லது அவள் ஒரே சரீரமாவதால் அதினால் கர்த்தரை கோபமூட்டுகிறார்களா? அவிசுவாசியான துணையை விசுவாசிக்கிற துணை தள்ளிவிடுவது நன்றா யிருக்காதா, அல்லது குறைந்தபட்சம் பாலியல் உறவை தள்ளிப் போடலாமா? பவுல், "இல்லை" என்று பதிலளித்தார். திருமணத்தை பராமரிப்பது முக்கியமானது. "புருஷன் ... தன் மனைவியோடே இசைந்திருப்பான்" (ஆதி. 2:24) என்ற கட்டளையையும் "ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக் கடவன்" (மத். 19:6) என்ற இயேசுவின் கட்டளையோடு அப்போஸ்தலர் வெளிப்படையாக இணைக்கிறார். விசுவாசியின் விருப்பத்துடன் திருமண வாழ்வை தெரிந்தெடுத்தபடியால், வாழ்க்கைத்துணை கிறிஸ்தவராகவோ அல்லது கிறிஸ்தவரல்லா தவராகவோ இருந்தாலும் திருமண உறவு

தொடர வேண்டும்.

ஒரு விசுவாசி மற்றும் அவிசுவாசி வாழ்க்கைத்துணைக்கும் இடையே உள்ள நெருக்கமான உறவு கிறிஸ்தவ துணை தேவனோடு வைத்திருக்கும் உறவால் "பரிசுத்தப்படுத்தப்படுகிறது" (ἡγίασται, *hēgiastai*) என்று அப்போஸ்தலர் வலியுறுத்தினார். ஒரு நபர், பொருள், அல்லது நடத்தை தேவனால் ஏற்கத்தக்கது மற்றும் அவரது சேவைக்கு பொருத்தமானது எனில் அது "பரிசுத்த மாக்கப்படுகிறது" (from ἁγιάζω, *hagiazō*). "இது பரிசுத்தமாக்கப் பட்டது" என்பதை மற்றொரு வகையில் சொல்வதானால், "இது பரிசுத்தமானது" என்று சொல்லலாம். அவிசுவாசி விசுவாசியால் பரிசுத்தப் படுத்தப்படுகிறார் என்று பவுல் சொன்ன போது, அவர் உறுதிப்படுத்தியதாவது விசுவாசியான வாழ்க்கைத்துணையின் நிமித்தம் ஒரு கிறிஸ்தவருக்கும் அவிசுவாசியான வாழ்க்கைத் துணைக்கும் இடையே உள்ள உறவை தேவன் ஆசீர்வதித்து அனுமதிக்கிறார்.

திருமணவாழ்வில் இருவருமே கிறிஸ்தவரல்லாமல் இருந்தால் என்ன? இரண்டு அவிசுவாசிகளின் பாலியல் உறவை தேவன் அனுமதிக்கிறாரா? பவுலுக்கு இந்த கேள்விகள், அநேகமாக, கல்விசார்ந்த ஒரு ஆர்வமாக மட்டுமே இருக்கலாம். கிறிஸ்துவை அன்றி, திருமணமானவர்கள் மற்றும் திருமணமாகாதவர்கள் பாவத்தில் இழந்துபோனார்கள். இரண்டு அவிசுவாசிகளுக்கு இடையேயான திருமணத்தின் பரிசுத்தமோ அல்லது பரிசுத்த குறைவோ ஒரு முக்கியமான ஒரு விஷயமல்ல என்ற அளவிற்கு இழந்துபோனது மற்ற விஷயங்களை வெகுவாக பாதித்தது. தேவ உறவை இழந்து, நித்திய வாழ்க்கையின் நம்பிக்கையின்றி, ஒருவர் பாவத்தில் மூழ்கிய வாழ்க்கை வாழும்போது திருமண உறவானது ஒரு அற்ப விஷயம். திருமண பங்காளர்களில் ஒருவர் அல்லது இருவரும் கிறிஸ்தவர்களாக இருக்கும் பட்சத்தில் மட்டுமே திருமண உறவு தேவனால் பரிசுத்தப்பட்டது என்பது பொருட்படுத்த வேண்டிய ஒரு விஷயம். அவன் அல்லது அவள் இரட்சிக்கப் பட்டிருக்கிறபடியால், விசுவாசியின் நிமித்தம் திருமணத்திற் குள்ளான பாலியல் உறவு பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறது.

பவுல் நியாயவாதத்தை ஒரு படி மேலே எடுத்துச் சென்றார். குறைந்தபட்சம் திருமண உறவின் ஒரு பங்குதாரர் விசுவாசி யாயிருந்தால், அவர் நிமித்தம் திருமணத்தில் பாலியல் உறவு பரிசுத்தமானதாக இருப்பதால், அவ்வுறவின் மூலம் பிறந்த குழந்தைகள் பரிசுத்தமாக்கப்படுகிறார்கள். ஒரு குறிப்பை வலி யுறுத்த, பரிசுத்தமாக்கப்பட்ட உறவில் பிறந்த குழந்தைகளை அவிசுவாசப் பெற்றோர்களுக்கு பிறந்த குழந்தைகளிடமிருந்து வேறுபடுத்திக்காட்டுகிறார் அப்போஸ்தலர். திருமணமான ஒரு விசுவாசி மற்றும் அவிசுவாசிகளுக்கு இடையிலான பாலியல் உறவை தேவன் பரிசுத்தப்படுத்தாவிட்டால், அவர்கள் பிள்ளைகள்,

அவிசுவாசிகளின் பிள்ளைகளைப்போல, அசுத்தமாயிருப்பார்கள். ஒரு பிள்ளை அசுத்தமானதாக இருக்கும் சாத்தியத்தை பவுல் ஏன் அனுமதித்தார்? ஒரு குழந்தை பாவத்தில் பிறந்து, தேவனால் தண்டிக்கப்படுகிறது என்று கூறுகிற எந்தக் கோட்பாட்டையும் நாம் தள்ளுபடி செய்யலாம். பவுல் காலத்திலிருந்து பல வருடங்களுக்கு முன்னர், எசேக்கியேல் தீர்க்கத்தரிசி அந்த கருப்பொருளைப் பற்றி கூறியுள்ளார். "பாவஞ்செய்கிற ஆத்துமா சாகும்," என்று தீர்க்கத்தரிசி கூறினார். "குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தை சுமப்பதில்லை" (எசே. 18:20). எசேக்கியேல் அல்லது பவுல் ஆகிய இருவரும் பெற்றோருடைய பாவம் பிள்ளைக்கு மாற்றப்படுகிறது என்பதை அனுமதிக்கவில்லை.

திருமணத்தில் கணவனோ அல்லது மனைவியோ யாரேனும் ஒருவர் கிறிஸ்தவராக இருந்தாலும் அக்கிறிஸ்தவரின் பரிசுத்த நடக்கையின் நிமித்தம் அவர்களுக்கு பிறக்கிற குழந்தை பரிசுத்தமானதாக இருக்கும் என்று அந்தோணி சி. திசில்டன் (Anthony C. Thiselton) அவர்கள் பரிந்துரைத்துள்ளார். அவிசுவாசி யான திருமண பங்காளரும் குழந்தைகளும் தேவ பக்தியுள்ள ஒரு வாழ்க்கை வாழ உந்துவிசையாக இருப்பது விசுவாசியான திருமணத்தின் பங்காளர் ஆகும்.[7] தந்தை அல்லது தாய் இருவரும் கிறிஸ்தவரல்லாத பட்சத்தில், குழந்தை பரிசுத்தமற்றது என்பதற்கான காரணம் என்னவெனில் ஒரு கிறிஸ்தவர் கொடுக்கும் போதனை, வழி நடத்துதல் மற்றும் கிறிஸ்தவ தாக்கங்களினால் அக்குழந்தை பயனடைவதில்லை என்பதே. இந்த வேதபகுதியில் அவிசுவாச பெற்றோர்களுக்கு பிறந்த குழந்தைகளை குறித்தது பவுலுடைய கரிசனை அல்ல. மாறாக, நேர்மறையாக அவருடைய வாதம் என்னவெனில் திருமணத்தில் குறைந்தபட்சம் ஒரு பங்காளர் கிறிஸ்தவராக இருப்பின், உறவோ அல்லது குழந்தைபிறப்போ அசுத்தத்தினால் கறைபடுவதில்லை

**வசனம் 15.** திருமணத்தில் கிறிஸ்தவர் கிறிஸ்தவரல்லாதவரை கட்டுப்படுத்த முடிவதில்லை என்பதை பவுல் சுட்டிக்காட்டுகிறார்; அதாவது, அவன் அல்லது அவள் திருமணத்தில் நீடித்திருக்க அவி சுவாசியை கட்டாயப்படுத்த முடியாது. திருமணம் என்பது வாழ்நாள் முழுவதிற்குமான ஒரு அர்ப்பணிப்பு என்பது தேவனுடைய விருப்பமாயிருக்கிறது; இருப்பினும், பவுல் எழுதினார், **ஆகிலும் அவிசுவாசி பிரிந்து போனால், பிரிந்துபோகட்டும்**. அவிசுவாசி யான துணையாளர் பிரிந்துபோவதை தெரிந்தெடுத்தால் கிறிஸ்தவர் அதைக்குறித்து குற்ற உணர்வு கொள்ளவேண்டாம். கைவிடப் பட்டவர் திருமணத்தை தொடர **அடிமைப்பட்டவரல்ல** என்று பவுல் கூறினார். கிறிஸ்தவ துணையாளர் கைவிடப்படுவதற்கு முன்னர் "அடிமைப்பட்டவர்" என்று பவுலுடைய வார்த்தைகள் குறிப் பிடுகிறது, ஆனால் எதற்கு அல்லது யாருக்கு விசுவாச துணையாளர் அடிமை?

திருமணம் சமமான அடிமைத்தனமா? கடமை உணர்வு என்பது ஒரு திருமணத்தை பாதுகாக்க குறைவான ஒரு அடிப்படையாக தெரிகிறது, ஆனால் ஒருவேளை பவுல் மனதில் திருமண துணையாளர் அடிமையாக இல்லை.

அவிசுவாசியான துணையாளரால் விசுவாசி கைவிடப் பட்டபோது அவர் அடிமைப்பட்டவர் அல்ல என்று பவுல் கூறியபோது, அவர் திருமணத்தின் சமூக (தனிநபர் அம்சங்களை அல்ல) அம்சங்களை மனதில் வைத்திருந்தார். திருமணத்தை தக்க வைக்க அவன் அல்லது அவள் தங்களால் ஆன எல்லாவற்றையும் செய்ய வேண்டும் என்ற சமூக எதிர்பார்ப்பு கைவிடப்பட்ட கிறிஸ்தவ மனைவி அல்லது கணவரை கட்டுப்படுத்தாது. பவுலுடைய ஆலோசனைகளை வலியுறுத்த கொரிந்தியருக்கு கூடுதலான சான்று தேவைப்பட்டால், **சமாதானமாயிருக்கும் படிக்கே தேவன் நம்மை அழைத்திருக்கிறார்** என்பதை மனதிற்கொள்ள வேண்டும். கிறிஸ்தவ துணையாளரோடு வாழ மறுத்துவிட்ட அவிசுவாச துணையாளரை பிரியப்படுத்த ஒருவர் தன் முழு ஆற்றலையும் ஈடுபடுத்துவது சமாதானத்திற்கான வழி அல்ல.

கைவிடப்பட்ட கிறிஸ்தவர் மீண்டும் திருமணம் செய்யலாம் என்று பொருள்கொள்ளும்படி சிலர் இந்த வேதபகுதிக்கு விளக்கமளித்தனர். கைவிடப்படுதல் சில வேளைகளில் "பவுலின் பாக்கியம்" என்று அழைக்கப்படுகிறது, ஆனால் பவுல் சொன்ன வார்த்தைகளில் மறுமணம் விஷயத்தை குறித்த எதையும் காண முடியவில்லை. விவாகரத்து பாக்கியமாக கருதப்பட்ட படியால் மறுமணத்தைக் குறித்து பவுல் அப்போஸ்தலர் நினைத்திருக்க மாட்டார். "மனைவியானவள் தன் புருஷனை விட்டுப் பிரிந்து போகக்கூடாது" (7:10) என்றும் "புருஷனும் தன் மனைவியைத் தள்ளி விடக்கூடாது" (7:11) என்றும் அவர் ஏற்கனவே கட்டளை கொடுத்திருக்கிறார். தன் துணையை விட்டுப்பிரிந்த அல்லது விவாகரத்து செய்த ஒருவர் "திருமணம் செய்யாதிருக்க வேண்டும் அல்லது ஒப்புரவாகவேண்டும்" (7:11). திருமணத்தை தக்க வைப்பதற்கான விலை கர்த்தர் மேல் உள்ள விசுவாசத்தை தியாகம் செய்வதெனில், விசுவாச மற்ற கணவன் அல்லது மனைவியுடன் உறவை பராமரிப்பதற்கான பொறுப்பு கைவிடப்பட்ட கிறிஸ் தவருக்கு இல்லை. விசுவாசத்தை மறுதலிப்பதற்கு தகுதியான எந்த ஒரு காரணமும் இல்லை. "திருமணத்தை நிறுத்த கட்டாயப்படுத்துகிற அவிசுவாசி துணையாளரோடு உறவை பராமரிப்பதற்கு கிறிஸ்துவின் விவாகரத்திற்கான தடை ஒருவரை அடிமைப்படுத்தவில்லை என்று 15 ஆம் வசனத்தில் பவுல் வெறுமனே குறிப்பிடுகிறார்."[8] திருமணத்தைத் தொடருவதற்கான விசுவாசியின் சுதந்திரத்தில் மறுவாழ்வுக்கான தாக்கங்கள் எதுவும் இல்லை.

**வசனம் 16.** அவர் திருமணத்தைக்குறித்த உயர்வான

எண்ணங்கொண்டபடியினால் - இரண்டு தனி நபர்களுக்கும் சமுதாயத்திற்குமான நன்மைகள் பற்றிய ஒரு நேர்மறையான புரிந்து கொள்ளுதல் - அவிசுவாசிகளை திருமணம் செய்து கொண்ட விசுவாசிகள் அதில் தொடர பவுல் வலியுறுத்தினார். அதாவது, திருமணத்தை பாதுகாக்க அவர்களை ஊக்கப்படுத்தினார். எனினும், விசுவாசி திருமணம் செய்துகொள்ள மற்றொரு காரணத்தை அவர் கொடுத்தார். அவிசுவாசியுடனான திருமணம் நற்செய்தி பணிக்கான ஒரு வாய்ப்பை தந்தது. விசுவாசியின் முன்மாதிரி மற்றும் உபதேசத்தின் மூலம், அவிசுவாசி கிறிஸ்துவை தெரிந்துக் கொள்ள கூடும். உனக்கு எப்படித் தெரியும், என்று அப்போஸ்தலர் கேட்டார், சொல்லப்போனால், “கிறிஸ்தவ கணவன் அல்லது மனைவி தன்னுடைய விசுவாசமற்ற துணையை இரட்சிப்புக்கு வழிநடத்தக் கூடுமே?”

கிறிஸ்துவிற்கு எதிராக விசுவாசமற்ற துணை தன்னை கடினப்படுத்திய ஒரு சூழ்நிலையைப் பற்றியே 7:15ல் பவுல் பேசியதாக சிலர் நினைக்கிறார்கள். அவிசுவாசியை விசுவாசி கிறிஸ்துவுக்குள் வழி நடத்துவதற்கான வாய்ப்பு குறைவாயிருக் கிறபடியால், இப்படி விவாதிக்கப்பட்டது, திருமணத்தை தக்க வைக்க எந்த முயற்சியையும் எடுக்கவேண்டாம் என்று கிறிஸ்தவ துணைக்கு ஆலோசனை கொடுத்ததாக. இந்த விளக்கம் தோல்வி யுற்றது, ஏனெனில் பவுல் நேர்மாறான ஆலோசனையை தந்தார், திருமணத்தை தொடர விசுவாச துணையாளரை பவுல் வலியுறுத்தினார்.

தங்கள் மனைவிகளை மற்றும் புருஷர்களைக் குறிப்பிடுவதற்கு முன்பாக, புருஷர்களை கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்திக் கொள்ளக்கூடிய மனைவிகளைப் பற்றி பவுல் குறிப்பிட்டார். ஆண்களை விட அதிகமான பெண்களைக் கொண்டதா கொரிந்து சபை?[9] திருமணத்தில் ஒருவர் தன் துணையை கிறிஸ்துவிற்கு வழிநடத்துவார் என்று பேதுரு வலியுறுத்திய போது, அவர் குறிப்பாக பெண்களை குறிப்பிட்டு பேசினார்: “அந்தப்படி மனைவிகளே உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால், பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக் கொள்ளப் படுவார்கள்” (1 பேதுரு 3:1, 2). எந்த விதமான விளக்கத்தையும் ஒருவர் கொடுக்கலாம், இன்றைய சபைகளின் அங்கத்தினர் விகிதத்தில் பெண்கள் சமமற்ற பங்கு வகிக்கிறார்கள் என்பதே உண்மை.

## தேவன் ஒவ்வொருவரையும் அழைத்ததுபோல (7:17-24)

எல்லா மக்களும் தேவனுக்கு முன்பாக நியாயத்தீர்ப்பில் நிற்கும்,

கடைசி காலத்தைப் பற்றி பவுல் யோசித்துக்கொண்டிருந்தார். விசுவாசத்தைக் கொண்டு வாழ்வதற்கான முயற்சி, வருகையின் நாள், மற்றும் நித்திய வாழ்வுக்கான நம்பிக்கை ஆகியவை கிறிஸ்தவ முடிவெடுத்தல் மற்றும் பழக்க வழக்கங்களை நிர்வகிக்கிறது. ஆகையால், மாம்சீக மாற்றம் என்று கருதப்படுகிற சமுதாய உறவைக் கொண்டு அப்போஸ்தலர் மிகுந்த நியாயத்தீர்ப்புச் செய்தார். திருமணம் ஒரு முக்கியமான சமுதாய உறவு, ஆனால் நித்தியத்தில் அது ஒரு அற்பமான ஒரு விஷயம். கொரிந்திய கிறிஸ்தவர்கள் திருமண நிலையை தேவனுடன் உள்ள ஒருவரது உறவோடு மிக நெருக்கமாக தொடர்புபடுத்தினார்கள். கிறிஸ் துவை அறிக்கையிடுவதற்கும் அவருக்கு கீழ்ப்படிவதற்கும் திருமண உறவையோ அல்லது மற்ற சமுதாய உறவுகளையோ முழுமையாக மாற்ற வேண்டிய அவசியமில்லை. கர்த்தருடைய வருகையின்மேல் கவனம் செலுத்துபவர்களுக்கு பூமியின் உறவுகள் புது அர்த்தம் தருகிறது. கடைசி காலத்தின் பார்வையில், அவைகள் முன்னதாக எண்ணப்பட்டது போல ஒருவருக்கு அவைகள் முக்கியம் அல்ல. ஆகையால், திருமணமானவர்கள் கிறிஸ்துவால் அழைக்கப் பட்டபோது திருமண உறவை தொடரும்படி அப்போஸ்தலர் அறிவுரை கூறினார். கணவன் அல்லது மனைவி இல்லாமல் இருந்தவர்கள் திருமணமாகாதவர்களாக இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டார்கள். காலம் குறுகினதானபடியால் (7:29), "நீங்கள் இருக்கிறதைப் போல தொடருங்கள்" என்று அப்போஸ்தலர் கூறினார்.

திருமண உறவுகளைக்குறித்து அவர் சொன்ன வைகளை செயல்விளக்கி வலியுறுத்தும்படி, மற்ற சமுதாய உறவுகளை பவுல் எடுத்துக்கொண்டார். ஒருவர் யூதராகவோ அல்லது ஒரு புற ஜாதி யாகவோ, விருத்தசேதனம் உடையவராகவோ அல்லது விருத்தசேதனம் இல்லாதவராகவோ அழைக்கப்பட்டிருக்கலாம். இன ரீதியான அடையாளம் கிறிஸ்தவருக்கு எந்த முக்கியத்துவமும் இல்லை. மாம்சத்தின் தழும்புகளால் குறிக்கப்பட்ட பழைய மத விசுவாசங்கள் இப்போது அர்த்தமற்றவை. அடிமை அல்லது சுயாதீனன் ஆன ஒரு பாவி கிறிஸ்துவை தரித்துக் கொள்ளலாம். ஒவ்வொருவரும் அவரது தற்போதைய சமூக நிலை மற்றும் அதைச் சார்ந்த கண்ணிகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். கர்த்தர் மிகத் துரிதமாக திரும்பி வருவார், என்று வேதபகுதி அர்த்தம் கொள்ளுகிறது. பின்னர் அவனவனுடைய கிரியைகளின்படி அவர் பலனளிக்கிறார் (2 கொரி. 5:10). ஆகையால் பவுல் எழுதினார்,

**17தேவன் அவனவனுக்குப் பகிர்ந்ததெப்படியோ, கர்த்தர் அவனவனை அழைத்ததெப்படியோ, அப்படியே அவனவன் நடக்கக்கடவன். எல்லாச் சபைகளிலேயும் இப்படியே திட்டம் பண்ணுகிறேன். 18ஒருவன் விருத்தசேதனம் பெற்றவனாய் அழைக்கப்பட்டிருந்தால்,**

**விருத்தசேதனமில்லாதவனாயிருக்க வகை தேடானாக; ஒருவன் விருத்தசேதனமில்லாதவனாய் அழைக்கப் பட்டிருந்தால், விருத்தசேதனம் பெறாதிருப்பானாக. [19]விருத்த சேதனமும் ஒன்றுமில்லை, விருத்தசேதனமில்லா மையும் ஒன்றுமில்லை; தேவனுடைய கற்பனைகளைக் கைக் கொள்ளுகிறதே காரியம். [20]அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலைமையிலே நிலைத்திருக்கக்கடவன். [21]அடிமையாய் நீ அழைக்கப்பட்டிருந்தால், கவலைப்படாதே; நீ சுயாதீனனாகக் கூடுமானால் அதை நலமென்று அநுசரித்துக்கொள். [22]கர்த்தருக்குள் அழைக்கப்பட்ட அடிமையானவன் கர்த்தருடைய சுயாதீனனாயிருக்கிறான்; அப்படியே அழைக்கப்பட்ட சுயாதீனன் கிறிஸ்துவினுடைய அடிமையாயிருக்கிறான். [23]நீங்கள் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள்; மனுஷருக்கு அடிமை களாகாதிருங்கள். [24]சகோதரரே, அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலைமையிலே தேவனுக்கு முன்பாக நிலைத்திருக்கக்கடவன்.**

**வசனம் 17.** இந்த கிறிஸ்தவர்களை வழிநடத்தும் இரண்டு காரணங்களை அடையாளம் கண்டு கணவர்களுக்கும் மனைவிகளுக்கும் சொன்னதை அப்போஸ்தலன் விரிவாக எடுத்துரைத்தார். முதலாவது, மனமாற்றத்தின் வேளையில் **கர்த்தர் அவனவனுக்கு** கொடுத்த சமுதாய உறவிலே திருப்தியடைந்த வர்களாக இருக்க வேண்டும். இரண்டாவதாக, ஒருவருடைய மனமாற்றத்திற்கு முந்தைய வாழ்க்கை சமுதாய கடமைகளில் சிக்கிக்கிடக்கிறது என்ற முழுமையான அறிவை புரிந்துகொள்ள **தேவன் அழைப்பு** விடுத்துள்ளார். இங்கு சொல்லப்பட்டுள்ள கருப்பொருள் என்னவெனில் ஒருவர் கிறிஸ்துவின் கர்த்தத்து வத்திற்கு தன்னை அர்ப்பணிப்பதினால் சமூகத்தில் அவருக்குள்ள ஒழுங்குகள் மாறுவதில்லை. தேவையற்ற மோதல்களை தவிர்க்க பவுல் கிறிஸ்தவர்களுக்கு உதவ முயற்சி செய்கிறார். கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதென்பது பாவமுள்ள வாழ்க்கை முறைகளிலிருந்து திரும்புவதே அன்றி, வாழ்க்கைமுறையை முழுமையாக மாற்றுவது அல்ல என்பதை அவர்கள் தெரிந்து கொள்ள பவுல் விரும்பினார். திருமணம் என்பது ஒருவர் “அழைக்கப்பட்ட அந்த நிலையில் இருக்க வேண்டும்” என்று எதிர்பார்க்கப்படுவதற்கான ஒரு எடுத்துக்காட்டு (7:20).

நிச்சயமாக, முந்தைய நிலையில் இருக்க வேண்டும் என்ற கட்டளை சுய மேம்பாட்டின் அவசியத்தை நிராகரிக்கவில்லை; ஆனால் அவர்களுடைய கட்டுப்படுத்தவேண்டிய விஷயங்களில் மட்டுமே தேவன் கணக்கு வைத்திருப்பார் என்பதை சகோதரர்கள் அறிந்திருக்க வேண்டும் என்று பவுல் விரும்பினார். நியாயமற்ற மற்றும் மோசமான சூழ்நிலைகளைச் சமாளிக்கத் தேவையானவைகளை அவருடைய மக்களுக்கு அவர் கொடுத்திருக்கிறார். செல்வந்தர்களும் ஏழைகளும், பெலன் உள்ளவர்களும், உதவியற்றவர்களும் தேவனுடைய

பார்வையில் கணக்கற்ற மதிப்புடையவர்கள் என்று அவர்களுக்கு அவர் உறுதிபடக் கூறுகிறார். அவர்களால் முடிந்த விஷயங்களுக்கு மட்டுமே அவர்கள் கணக்கு ஒப்புவிக்க வேண்டியதே அன்றி, அவர்களால் மாற்ற இயலாத காரியங்களுக்கு அல்ல என்ற கொள்கையை கொண்டிருந்தார் அவர் (காண்க 2 கொரி. 8:12).

கொரிந்திய கிறிஸ்தவர்களில் சிலர் உணர்வு பூர்வமானவர்கள், அல்லது ஒருவேளை சபையை நிர்வாகம் செய்யும்படி பவுல் உருவாக்குகிற நியமங்களுக்கு எதிர்த்துநிற்கிறவர்கள் எனில் **எல்லாச்சபைகளிலேயும் இப்படியே திட்டம் பண்ணுகிறேன்** என்ற அவரது குறிப்பு புரிந்து கொள்ளத்தக்கது. தன்னுடைய அறிவுரைகள் குறிப்பாக அவர்களுக்கென்று வடிவமைக்கப்படவில்லை என்று அவர் அவர்களுக்கு விளக்கிக்கூறினார். கிறிஸ்தவராக வாழ்வ தென்பது, கொரிந்துவிலோ அல்லது வேறெங்காயிருந்தாலும், சவால் நிறைந்ததாக காணப்படுகிறது. அவர்கள் சேவிக்கிற தேவன் இந்த உலகம் தீமையானது என்பதை அறிந்திருந்தார். அக்காலத்தில் உள்ள சில கிறிஸ்தவர்கள் திருக்கான திருமண ஏற்பாடுகள் செய்திருந்தது குறித்து அவர் அறிந்திருந்தார், மற்றவர்கள் சரீரபிரகாரமாக அடிமைகளாக்கப்பட்டிருந்தனர். அவர்களுடைய சமூக கடமைகளை பொறுத்தவரையில் சகிப்புத்தன்மையற்றதாக இருப்பினும், வர இருக்கிற உலகத்திலே தேவனுடன் வாழ்வதற்காக அவர்கள் பாவமன்னிப்பும் வாழ்விற்கான நம்பிக்கையும் பெற்ற கிறிஸ்தவர்களாக இருந்தனர்.

**வசனம் 18.** இயேசுகிறிஸ்துவின் மரணத்திற்குப் பின்பான முதல் பத்து வருடங்களில், நியாயப்பிரமாணத்திற்கு வைராக் கியமாக இருந்த யூத கிறிஸ்தவர்கள் கணிசமான அளவில் இருந்தார்கள். புறஜாதியார் கிறிஸ்தவர்களாக மனம் மாறுவதற்கு முன்பு நியாயப்பிரமாணத்தை தழுவிக்கொள்ள வேண்டுமென அவர்களில் அநேகர் நம்பினார்கள் (காண்க அப். 21:20). மனம்மாறிய புறஜாதி மக்கள் சந்தித்த சவால்களின் நிமித்தம் கலாத்தியருக்கு எழுதின நிருபத்தை எழுதும்படி பவுல் ஏவப்பட்டார். இந்த விஷயத்தைப் பற்றி அவர் உணர்ச்சி வசப்பட்டார், ஆனால் கலாத்தியர் 5 அல்லது பிலிப்பியர் 3 ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள உணர்வுகள் எதுவும் பவுல் 1 கொரிந்தியர் 7:18, 19ல் விருத்தசேதனத்தை குறித்து எழுதியபோது அவரை தூண்டவில்லை. இதுபோன்ற சர்ச்சைகள் கொரிந்திய சபையில் வேரூன்றவில்லை என்று தோன்றுகிறது, குறைந்த பட்சம் இந்த தருணத்தில்.[10] அப்படியானால், பவுல் ஏன் இந்த விஷயத்தைக் கொண்டுவந்தார்? திருமணமானவர்களும் திருமணமாகாதவர்களும் அழைக்கப்பட்ட நிலையிலே தொடரவேண்டும் என்ற பவுலுடைய விவாதத்திற்கு விருத்தசேதனம் மற்றும் விருத்தசேதனமில்லாமை எங்ஙனம் ஆதரவு அளிக்கிறது (7:12-17)?

உலகளாவிய சபைக்கான அப்போஸ்தலருடைய போராட்டம், யூதர்கள் மற்றும் புறஜாதியாரை உள்ளடக்கியது என்பது எப்போதும் அவர் மனதில் உண்டு. புறஜாதியார் விருத்தசேதனம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை உடைய யூதக் கிறிஸ்தவர்களுக்கும் பவுலுக்கும் இடையே உள்ள பதட்டம் வெகு தூரத்தில் இல்லை. விருத்தசேதனம் என்பது கணிசமான உணர்ச்சி மற்றும் கலாச்சார ரீதியாக இருந்த ஒரு விஷயம்; இருப்பினும், பவுலுடைய பார்வையில், தேவனுடனான ஒருவருடைய உறவை வரையறுப்பதில் விருத்தசேதனத்திற்கு எந்த முக்கியத்துவமும் இல்லை. விருத்தசேதனத்தைக் குறித்த கிறிஸ்தவர்களுடைய அலட்சியம் என்பது ஒருவருடைய திருமண நிலையோடு தொடர்பு படுத்துகிற இணைப்பு ஆகும். திருமணமானவரோ அல்லது திருமணமாகாதவரோ, விருத்தசேதனமுள்ளவரோ அல்லது விருத்தசேதனமில்லாதவரோ கிறிஸ்தவராகும்போது, மாற்றம் என்பது அவசியமில்லை. ஒரு யூத கிறிஸ்தவர் **விருத்தசேதன மில்லாதவனாயிருக்க வகை தேடானாக**; புறஜாதியார் ஒருவர் **விருத்தசேதனம் பெறாதிருப்பானாக**. திருமணமானவர், அதுபோல, திருமணத்தை கலைக்காதிருக்க வேண்டும்; திருமணமாகாத கிறிஸ்தவர் திருமணத்தைத் தேடாதிருக்க வேண்டும்.

புறஜாதி கிறிஸ்தவன் விருத்தசேதனம் செய்ய தீர்மானிப்பது ஒருவகையில் புரிந்துகொள்ளத் தக்கது, ஆனால் ஒரு யூதர் “விருத்தசேதனமில்லாதவனாயிருக்க” வகைதேடவேண்டாம் என்று பவுல் சொன்ன போது அவர் அர்த்தம் கொண்டது என்ன? ஏன் எப்படி ஒருவர் விருத்த சேதனமில்லாதவராக மாற முடியும்? கிரேக்க கலாச்சாரம் யூத சமய நம்பிக்கையில் நுழைந்த போது, கிறிஸ்துவிற்கு முந்தைய நூற்றாண்டுகளில் விருத்தசேதன தழும்புகளை அகற்றும் படியான விருப்பம் சில யூதர்களுக்குள்ளே தொடங்கியது. யூதர்களின் பாரம்பரியங்களிலிருந்து வேறுபடுகின்ற மற்ற பல நடை முறைகளில், கிரேக்கர்கள் நிர்வாணமாக உடற் பயிற்சி செய்வது ஒன்று.[11] சரீரத்தை சிதைக்கிற விருத்தசேதனம் போன்ற சடங்குகள், கிரேக்கர்களை பொறுத்த வரையில், காட்டுமிராண்டித்தனமானது. நாகரீகமான யூதர்கள், கிரேக்க முறைமைகளை பின்பற்றும் விருப்பத்துடன், உடற்பயிற்சி மையத்தில் நிர்வாணமாக தோன்றி, விருத்தசேதனத்தை பார்வையாக்குவதால் மனமடிவாக்கப்பட்டார்கள். ἐπισπάομαι (*epispaomai*, “விருத்த சேதனத்தை அழித்தல்”) என்ற கிரேக்க வார்த்தை புதியஏற்பாட்டில் இங்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. அதனுடைய பொதுவான அர்த்தம் என்னவெனில் தனக்குள்ளேயே ஏதோ வொன்றை கொண்டுவருவதாகும், நேர்மறையாகவோ அல்லது எதிர்மறையாகவோ.[12] தங்கள் விருத்தசேதனத்தை மறைக்க தேவையான ஒரு சிறு அறுவை சிகிச்சை முறையை குறிப்பிட யூதர்கள்

இந்த வார்த்தையை தழுவி பயன்படுத்தினார்கள்.[13] கொரிந்துவிலிருந்த யூத கிறிஸ்தவர்கள் விருத்தசேதனத்தின் அடையாளத்தை அகற்ற முயற்சி செய்திருக்கிறார்கள் என்பது நம்பத்தகாதது; அப்போஸ்தலர் தத்துவரீதியாக சொல்லி யிருக்கலாம். விருத்தசேதனம், திருமணம் அல்லது திருமணம் இல்லாமை போல, எந்த ஆவிக்குரிய விளைவுகளும் இல்லை என்று அவர் சொல்லியிருக்கக்கூடும்.

**வசனம் 19. விருத்தசேதனம் ஒன்றுமில்லை** என்பதற்கு இணையாக **... தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறதே காரியம்** என்று சொல்லப்பட்டிருப்பது இந்த வேதபகுதியின் குறிப் பிடத்தக்க அம்சம். விருத்தசேதனம் என்பது "தேவனுடைய கற்பனைகளில்" ஒன்றாக இருந்தது; மற்றும், யூதர்களுக்கு, இது பழமையான மிகவும் புகழ்பெற்ற கட்டளைகளில் ஒன்றாகும் (ஆதி. 17:9, 10; யோசுவா 5:2-5). விசுவாசத்தினால் உண்டாகும் தேவனுடைய மீட்பை நிரூபிக்கும்படி பழைய ஏற்பாட்டின் அதிகாரத்தை வலியுறுத்த அப்போஸ்தலர் தயங்கவில்லை (ரோமர் 4:3-8), சபையின் நடைமுறை பழக்கங்களை ஆதரிக்கும்படி (1 கொரி. 9:9), அல்லது நீதிக்குரிய கட்டளைகளை நிரூபிக்க (கலா. 5:14). அதே வேளையில், இஸ்ரவேலரின் மத சடங்குகளின் இனக்கூறுகள் புறஜாதிகளுக்கு பொருந்தாது என்பதை வலியுறுத்திக் கொண்டிருந்தபோது பவுல் சமரச மற்றவராக இருந்தார்.

யூத மதத்தின் பிரத்தியேகமான இனக்கூறுகளை இனி பின்பற்றமுடியாது என்ற காலகட்டத்தைக் குறித்து தான் பவுல் போதித்தார் என்பதை பகுத்தறிவுள்ள யூத கிறிஸ்தவர்கள். தாங்கள் தெரிந்தெடுத்த நியாயப்பிரமாணத்தின் அம்சங்களை சேர்ந்த பழக்க வழக்கங்களை நடைமுறைப்படுத்துவதோ அல்லது நடைமுறைப் படுத்தாமலிருப்பதோ அவர்கள் விருப்பம் என்பதை பரிசுத்த ஆவியின் சாட்சியை ஏற்றுக் கொண்டவர்கள் உணர்ந்து கொண்டனர். ஆனால் அவர்கள் தங்கள் இன ரீதியிலான யூத மதத்தின் அம்சங்களை புறஜாதி விசுவாசிகள் மேல் திணிக்கக்கூடாது. இனரீதியிலான புரிந்து கொள்ளுதலின்படி, கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார் (ரோமர் 10:4). கிறிஸ்தவ செய்தியின் தாக்கத்தை நிராகரித்த யூதர்கள், "நியாயப் பிரமாணத்தைக் குறித்த வைராக்கியமுடையவர்கள்" (அப். 21:20) மற்றும் விசுவாசிகளான பின்பும் பரிசேய முறைமைகளை பின்பற்றினவர்கள் (அப். 15:5), பவுலுக்கு எதிரிகளாகி அவருடைய போதனைகளுக்கு முடிவுகட்ட முயற்சித்தவர்கள். பவுலை பொறுத்த வரை, ஒருவர் தேவனுக்கு முன்பாக நிற்கிறபொழுது விருத்த சேதனத்தினால் எந்த பிரயோஜனமும் இல்லை என்று புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. ஒருவருடைய திருமணநிலை பொருத்த மற்றது போலவே விருத்தசேதனமும். திருமணம் அல்லது இன அடையாளத்தை பொறுத்தவரை கிறிஸ்தவர் தன் நிலை மையை மாற்றிக்கொள்ள

வேண்டிய அவசியமில்லை.

**வசனம் 20.** விருத்தசேதனம் குறித்த தன்னுடைய கருத்துரையை நிறைவுசெய்கையில், பவுல் இப்படிக் கூறினார், **அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலைமையிலே நிலைத்திருக்கக்கடவன்.** சமுதாய மற்றும் திருமண நிலைக்கு இந்த சிந்தனை சம அளவில் பொருந்தும். 24-ஆம் வசனத்தில் அப்போஸ்தலர் இந்த அறிவுரையை மீண்டும் சொன்னார். விருத்தசேதனம் மற்றும் அடிமைத்தனம் பற்றிய தலைப்புக்கள் பிரம்மச்சாரிய வாழ்வு மற்றும் திருமணம் குறித்த பவுலுடைய விளக்கங்களுக்கு ஆதரவு அளித்தது.

**வசனம் 21.** ஒருவர் கிறிஸ்தவராகும்போது என்ன திருமண நிலையை உடையவராக இருந்தாரோ அதையே அவர் தொடரவேண்டும் என்ற தன்னுடைய கருத்தை வலியுறுத்த பவுல் விருத்தசேதனம் மற்றும் அடிமைத்தனம் குறித்த போதனைகளை பயன்படுத்தினார். இருப்பினும், திருமணம் அல்லது இன அந்தஸ்து போன்றவைகளோடு முழுமையாக அடிமைத்தனத்தை ஒப்பிட முடியாது, என்று அவர் ஒப்புக்கொண்டார். மேலும் அவர் கூறினார், **நீ சுயாதீனனாகக் கூடுமானால் அதை நலமென்று அநுசரித்துக்கொள்.**[14] ஆகையால், அடிமைகளுக்கான அப்போஸ்தலருடைய அறிவுரை என்பது திருமணமான/ திருமணமாகாத அல்லது விருத்த சேதனமுள்ள/ விருத்தசேதன மில்லாதவர்களுக்கான விவாதத்திற்கு இணையாக இல்லை. முதல் இரண்டு பிரிவுகளைப் பொறுத்த வரையில், அவர்கள் அழைக்கப்பட்டிருந்த நிலைமைகளில் தொடர அவர் சகோதரர்களுக்கும் சகோதரிகளுக்கும் சொன்னார்; ஆனால் அடிமைகளுக்கான கட்டளையை அவர் தளர்த்தினார். **அடிமையாய் நீ அழைக்கப்பட்டிருந்தால் கவலைப்படாதே**, என்று எழுதினார், அதன் பொருள் என்னவெனில், "அடிமை என்ற நிலை உன்னை மனக்கசப்படையச்செய்ய இடங்கொடுக்காதே. சுய இரக்கத்தில் உன்னை நிம்மதிப்படுத்தாதே."

அடிமைகளுக்கான பவுலுடைய அறிவுரை திரு மணமானவர்களுக்கு அவர் கொடுத்த அறிவுரையோடு ஒத்துப் போனாலும், அது வஞ்சகப்புகழ்ச்சியால் பூசப்பட்டிருந்தது. கிரேக்க-ரோம உலகில் உள்ள அடிமைகள் திருமணம் செய்ய அனுமதிக்கப்படவில்லை. அடிமைகளின் சரீரத்தின் பயன்படுத்த அல்லது துஷ்பிரயோகம் செய்ய அவர்களின் உரிமையாளர்களுக்கு அதிகாரம் உண்டு. கேடோ (Cato), ரோம விவசாய மனிதர், பின்வரும் ஆலோசனையை வழங்கினார்: "களைத்துப்போன எருதுகள், பெலவீனமான கால்நடைகள், பெலவீனமான ஆடுகள், கம்பளி, விலங்குகளின் தோல்கள், எருதுகள் இழுத்துச் செல்லும் பழைய பாரவண்டி, பழைய கருவிகள், பழைய அடிமை, நோய்வாய்ப்பட்ட அடிமை, வேறு எதுவாயினும் விற்பனை செய்வது மிதமிஞ்சியது."[15]

கேடோவின் மதிப்பீட்டில், ஒரு அடிமைக்கான அனுதாபம் உணர்வுபூர்வமானது. ஒரு பழைய அடிமையை அல்லது ஒரு பழைய எருதை வைத்திருப்பது திறமை இல்லாத வியாபார முடிவு. சமூகம் அடிமைகளை இரண்டாம் பட்ச மனிதர்களாகவே கருதுகிறது. கிறிஸ்துவில், அடிமை அல்லது சுயாதீனன், விருத்தசேதனமுள்ளவர் அல்லது விருத்தசேதன மில்லாதவர், திருமணமானவர் அல்லது திருமணமாகாதவர் போன்ற எந்த வித்தியாசமும் இல்லை.

**வசனம் 22.** கொரிந்து சபையில் அடிமைகள் மற்றும் யூதர்கள் நன்கு பிரதிநிதித்துவம் பெற்றவர்கள் என்பதால் கிறிஸ்தவர்கள் வெளிப்புற, உலக சூழ்நிலைகளை ஏற்றுக்கொள்வதற்கான வழி முறையை விளக்குவதற்கு விருத்தசேதனம் மற்றும் அடிமைத் தனத்தை பவுல் பயன்படுத்தினார். ஒருவருடைய தேவ நம்பிக்கையும் தேவனுடனான இரக்கமுள்ள நிலையும் வெளிப்புறமானது தவிர வேறு வகையில் வரையறுக்கப் பட்டிருக்குமானால் எந்தவிதமான வெளிப்புற நிலையும் தாங்கத்தக்கது. இன அந்தஸ்து அடிமைத்தனத்தினால் குறிக்கப் படுவதைக் காட்டிலும் விருத்தசேதனத்தினால் குறிக்கப்படுவது ஏற்றுக்கொள்ளும்படி எளிதாய் இருக்கும். கிரேக்க-ரோம சமுதாயத்தில் அடிமைத்தனம் ஆழமாக வேரூன்றி உறுதியாக இருந்தது. அதற்குள் பிடிக்கப்பட்டவர்களுக்கு, கிறிஸ்தவ அடிமையானவன் **கர்த்தருடைய சுயாதீனன்** அது போல சுயாதீனன் **கிறிஸ்துவுனுடைய அடிமையாயிருக்கிறான்** என்று மட்டுமே பவுலால் சொல்ல முடிந்தது. இக்கருத்து பூமிக்குரிய வாழ்க்கையை எளிதாக்கவில்லை, ஆனால் அது தற்போதைய உபத்திரவங்களை நியாயத்தீர்ப்பு மற்றும் நித்திய வாழ்க்கை போன்ற கட்டமைப்பின் வழியாக பார்த்தது.

**வசனம் 23.** கிறிஸ்துவின் உலகளாவிய முறையீடு, அடிமையோ அல்லது சுயாதீனனோ எல்லாருக்கும் அவர் வழங்கிய சமுதாய நிலை, போதுமான அளவு தெளிவாகத் தெரியவில்லை எனில், பவுல் மிகவும் வெளிப்படையாக சொல்லுகிறார். எல்லா கிறிஸ்தவர்களும், அடிமை அல்லது சுயாதீனன், கிறிஸ்து சிலுவையில் மரித்தபோது **கிரயத்துக்குக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.** உலக அளவில், கிறிஸ்துவை அறிக்கையிடுதல் மிகச் சிறந்த சமன்பாட்டாளராக பணியாற்றியது. சில சந்தர்ப்பங்களில், அடிமையானவன் தன்னுடைய எதிரிணையான சுயாதீனனைக்காட்டிலும் பொரு ளாதார நிலையில் பாதுகாப்பான நிலையில் இருக்கிறான்;[16] ஆனால் மனித சட்டத்தின் சட்டப் பூர்வமான கண்ணோட்டத்திலோ அல்லது மாம்சீக ஈடுபாட்டின் ஆன்மீக கண்ணோட்டத்திலோ அடிமைத்தனத்தை எண்ணினாலும், அப்போஸ்தலர் கூறிய அறிவுரையாவது, **மனுஷருக்கு அடிமைகளாகாதிருங்கள்.** அடிமைகள் என்ற தங்கள் நிலையை மாற்றிக்கொள்ள முடியாதவர்கள் தங்கள் வாழ்க்கையின் நிலையை எண்ணி அதைக்குறித்து துக்கப்படாதிருக்க ஆவன செய்ய வேண்டும்.

அங்ஙனம் கவலைப்படுதல் உலகின் மதிப்புகளால் சிறை பிடிக்கப்படுவதற்கு சமமானதாகும். உலக மதிப்பு களுக்கு அடிமைகளாக இருப்பதன் மூலம் “மனுஷரின் அடிமைகள்” ஆகாமலிருங்கள் என்று பவுல் அவர்களைக் கேட்டுக்கொண்டார். அடிமைகளையும் சுயாதீனர்களையும் தேவன் கிரயத்துக்கொண்டிருக்கிறார் என்பதை அறிந்திருப்பதே போதுமானது.

**வசனம் 24.** 7:20ல் அப்போஸ்தலர் சொன்ன யோசனையை மீண்டும் சொல்லி தனது போதனைகளை சுருக்கிக்கூறினார். ஒருவன் தான் **அழைக்கப்பட்ட நிலைமையிலே தேவனுக்கு முன்பாக நிலைத்திருத்தல்** என்பது கிறிஸ்தவர் ஒருவர் திருமணத்தையும் அதைச் சார்ந்த கடமைகளையும் மதிப்பதாகும். ஒரு கிறிஸ்தவராக இருப்பதினால், வீட்டு விஷயங்களில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்ற அவசியம் இல்லை. மாறாக, கிறிஸ்தவம் வீடுகளை இன்னும் நிலையானதாக ஆக்குகிறது.

## கொரிந்துவிலுள்ள திருமணமாகாதவர்களுக்கான வழிகாட்டுதல்கள் (7:25-40)

கிறிஸ்தவ கோட்பாடுகளை தங்கள் வாழ்க்கையில் கடைப் பிடித்தபடியினால் முந்தைய புறஜாதியார் சந்தித்த குழப்பத்தை கொரிந்து கிறிஸ்தவர்கள் பவுலுக்கு எழுதிய கடிதம் உறுதிப்படுத்துகிறது. கிரேக்க உலகத்தில், ஒழுக்க நெறி, வீடுகள், பிள்ளைகளை வளர்த்தல், மற்றும் திருமண உறவு போன்றவைகள் மாறுகிற நிலைமையில் இருந்தன. வேசித்தனம், சிசுக்கொலை, குழந்தைகளை சாவுக்குள்ளாக்குதல், விவாகரத்து, உச்சகட்ட தரித்திரம், மற்றும் அடிமைத்தனம் போன்றவைகள் குடும்பங்களை நேரடியாக பாதித்தன. கிறிஸ்தவராகுதல் வாழ்க்கை நடைமுறையில் மாற்றத்தை வலியுறுத்தியது, ஆனால் எவ்வளவு? மாற்றத்தை ஒருவர் எங்கு தொடங்கவேண்டும்?

பவுல் தேவனிடமிருந்து ஒரு நேரடி ஆலோசனையைப் பெற்றபோது, அதைப் பயன்படுத்தினார் (7:10); பெற்றுக் கொள்ளாத போது, அவர் பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலை நம்பியிருந்து தற்போதைய சூழ்நிலைக்குப் பொருந்துகிற புதிய போதனைகளை தந்தார். குறிப்பிட்ட சில நியமங்களை தந்து புறஜாதி சிந்தனைகளையும் நடைமுறைகளையும் பவுல் அப்போஸ்தலர் நேரடியாகக் கையாண்டார். அவர்களுடைய திருமண நிலையை பொறுத்தவரையில், கிறிஸ்தவர்கள் எப்படியிருக்கிறார்களோ அதை தொடர வேண்டும் (7:20). திருமணமான தம்பதியர் தங்களுக்குள் பாலியல் வெறுப்பை சுமத்தக்கூடாது. கிறிஸ்தவர் ஒருவர் அவிசுவாசியான ஒருவரை திருமணம் செய்திருக்கும்போது, கிறிஸ்தவர் திருமணத்தை தொடர வேண்டும்.

அடுத்து திருமணமாகாதவர்களிடம் அப்போஸ்தலர் தன் கவனத்தைத் திருப்பினார். பத்துக்கட்டளையின் "செய்யுங்கள்" மற்றும் "செய்யாதிருங்கள்" போன்ற கட்டளைகளை கொடுப்பது அவருடைய நோக்கமல்ல. மாறாக, 7:26ல் அவர் ஆலோசனை வழங்கி 7:28ல் திருத்தத்தை அனுமதித்தார்.

கொரிந்தியர்கள் பவுலுக்கு அனுப்பிய கேள்விகளுக்கு அவர் பதில் அளிக்கிறபோது, திருமணத்திற்குள்ளான பாலியல் உறவைக் காட்டிலும் பாலியல் வெறுப்புணர்வில் தேவன் பிரியமாயிருக்கிறார் என்பதை பவுல் மறுத்தார். மேலும் கிறிஸ்துவால் அழைக்கப்பட்ட ஒவ்வொரு கிறிஸ்தவரும் திருமண வாழ்க்கையை தொடரவேண்டும் என்று அவர் ஆலோசனை வழங்கினார். அடுத்த பிரிவில் அந்த சிந்தனை பற்றி அவர் விளக்கிக் கூறினார்.

## நீங்கள் இருக்கிற நிலையில் தொடருங்கள் (7:25-31)

**25அன்றியும் கன்னிகைகளைக்குறித்து, கர்த்தரால் எனக்குக் கட்டளை
இல்லை. ஆகிலும் நான் உண்மையுள்ள வனாயிருக்கிறதற்குக்
கர்த்தரால் இரக்கம் பெற்று, என் அபிப்பிராயத்தைத்
தெரியப்படுத்துகிறேன். 26அதென்னவெனில், இப்பொழுது
உண்டாயிருக்கிற துன்பத்தினிமித்தம் விவாகமில்லாமலிருக்கிறது
மனுஷனுக்கு நலமாயிருக்குமென்று எண்ணுகிறேன். 27நீ
மனைவியோடே கட்டப்பட்டிருந்தால், அவிழ்க்கப்பட வகைதேடாதே;
நீ மனைவி இல்லாதவனாயிருந்தால், மனைவியைத் தேடாதே. 28நீ
விவாகம் பண்ணினாலும் பாவமல்ல; கன்னிகை
விவாகம்பண்ணினாலும் பாவமல்ல. ஆகிலும் அப்படிப்பட்டவர்கள்
சரீரத்திலே உபத்திரவப் படுவார்கள்; அதற்கு நீங்கள் தப்ப
வேண்டுமென்றிருக்கிறேன். 29மேலும், சகோதரரே, நான்
சொல்லுகிறதென்னவெனில், இனிவரும் காலம் குறுகினதானபடியால்,
மனைவிகளுள்ளவர்கள் மனைவிகளில்லாதவர்கள் போலவும்,
30அழுகிறவர்கள் அழாதவர்கள் போலவும், சந்தோஷப்படுகிறவர்கள்
சந்தோஷப் படாதவர்கள் போலவும், கொள்ளுகிறவர்கள்
கொள்ளாதவர்கள் போலவும், 31இவ்வுலகத்தை அனுபவிக்கிறவர்கள்
அதைத் தகாதவிதமாய் அனுபவியாதவர்கள் போலவும்
இருக்கவேண்டும்; இவ்வுலகத்தின் வேஷம் கடந்து போகிறதே.**

**வசனம் 25. அன்றியும்** குறித்த (περὶ δὲ, *peri de*) என்ற சொற்றொடர் பொதுவாக கொரிந்துவிலுள்ள கிறிஸ்தவர்கள் பவுலுக்கு முன்பாக வைத்த கேள்விகளை அறிமுகம் செய்து வைக்கிறது (7:1; 8:1; 12:1; 16:1), ஆனால் இந்த சந்தர்ப்பத்தில் வார்த்தைகள் முக்கியத்துவத்தில் மாற்றத்தையே வலியுறுத்துகிறது. சபையிலிருந்து வந்த கேள்வி ஒருபகுதிக்கும் அதிகமானதாக இருந்திருக்கும், ஆனால் பொதுவான

கரிசனை ஒன்றே: கிறிஸ்தவராக இருப்பதினால் பாலியல் மற்றும் திருமணத்தை குறித்து பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்துக்களை நிராகரிப்பதற்கு அழைப்பு விடுப்பதாக இருந்ததா? 7:17ல் பவுல் தொடங்கிய கருப்பொருளை மனதிற்கொண்டு அவர் பதிலளித்தார்: "... விவாகமில்லாமலிருக்கிறது மனுஷனுக்கு நலமாயிருக்குமென்று எண்ணுகிறேன்" (7:26).

கிரேக்க-ரோம உலகில் "கன்னிகை" என்பது, நம் காலத்தில் இருந்ததைப் போலவே, ஒரு மனிதருடனும் உறவுகொள்ளாத ஒரு இளம் பெண்ணை வழக்கம்போல குறிக்கிறது. எதிர்மறையான தாக்கங்களை உடைய ஆண் ஆதிக்கம்கொண்ட கலாச்சாரங்கள் நம்முடைய தற்போதைய ஆய்வுக்கு உட்பட்டவை அல்ல. உயிரியல் மற்றும் கலாச்சார பிரச்சனைகளை விரைவாக பார்க்கலாம்.

தூதன் மரியாளுக்குத் தோன்றினபோது, அவள் ஒரு "கன்னிகையாக" அடையாளப்படுத்தப்பட்டாள் (லூக். 1:27). அத்தருணத்தில் யோசேப்பைக் குறித்து எதுவும் சொல்லப்பட வில்லை (காண்க மத். 1:20-25). கிரேக்க புராணத்தில் ஆர்டிஸ், அதீனா, மற்றும் ஹெஸ்டியா என்னும் மூன்று கன்னி தேவதைகள் இருந்தனர். கிரேக்க வழிபாட்டில் அதற்கு இணையான எந்தவிதமான கன்னி தெய்வங்களும் இல்லை. இவ்விஷயத்தை முடிவின்றி விளக்கமுடியும். அரிதாக, **கன்னிகைகள்** என்ற வார்த்தை ஆண்களையும் பெண்களையும் சேர்த்துக் கூறுகிறது (வெளி. 14:4; KJV); ஆனால் பவுல் "கன்னிகைகளைக்குறித்து" என்று 7:25ல் எழுதியபோது, பாலியல் உறவில் ஈடுபடாத, திருமண மாகாதவர்களை அவர் குறிப்பிட்டார் (7:28, 36).[17]

கன்னிகைகளை குறித்த பவுலின் கரிசனை புலன்படாததாக இல்லை; அது திருமணத்தின் பின்னணியத்தில் இருந்தது. கிறிஸ்தவ திருமணத்தின் ஏற்புடைமையைக்குறித்து ஆண்களுக்கும் பெண்களுக்கும் அவர் போதித்துக் கொண்டிருந்தார்.

திருமணமானவர்களுக்கு, கர்த்தரிடமிருந்து கேள்விப் பட்டவர்களிடமிருந்து தேவையான போதனைகளை பவுல் பெற்றுக்கொண்டார் (7:10). திருமணத்திற்கு திட்டமிடுகிற இளம் வாலிபர்களையும் கன்னிகைகளையும் குறித்து **கர்த்தரிடம்** அவர் **கட்டளை** பெறவில்லை, ஆனால் அவருடைய அப்போஸ்தல அழைப்பு கூடுதலான வெளிப்பாட்டை அதிகாரபூர்வமாக தந்தது. **என் அபிப்பிராயத்தைத்** தெரியப்படுத்துகிறேன், என்று அப்போஸ்தலர் சொன்ன போது, அவருடைய ஆலோசனையை அலட்சியம் செய்வதற்கு அனுமதிக்கவில்லை. இரண்டு கோட்பாடுகளுக்கு தெய்வீக அதிகாரம் பெற்றிருப்பதாகக் அவர் கூறினார்: (1) திருமணத்தையும் திருமண தம்பதியர்களுக் கிடையிலான பாலியல் உறவையும் தேவன் அனுமதிக்கிறார், மற்றும் (2) திருமணம் என்பது வாழ்நாள்

முழுவதற்குமான ஒரு அர்ப்பணிப்பு. அதற்கு அப்பால், **உண்மையுள்ளவரா யிருக்கிறதற்குக் கர்த்தரால் இரக்கம்பெற்று** அப்போஸ்தலர் வழிகாட்டுதல் கொடுத்தார் (காண்க 7:40).

**வசனம் 26.** பவுல் திருமணத்தைக்குறித்து சொன்னவைகள் பொதுவாக சம அளவில் திருமணத்திற்கு திட்டமிடுகிறவர்களுக்கும் பொருந்தும். **இப்பொழுது உண்டாயிருக்கிற துன்பத்தினிமித்தம்**, **விவாகமில்லாமலிருக்கிறது மனுஷனுக்கு நலமாயிருக்குமென்று** அப்போஸ்தலர் எண்ணினார். என்ன "இப்போதைய துன்பம்" கொரிந்தியர்களை பாதித்துக் கொண்டிருந்தது என்பதை அப்போஸ்தலர் சொல்லவில்லை. உட்பூசல் மற்றும் வெளியிலிருந்து ஏற்பட்ட எதிர்ப்புகள் கொரிந்தியர்களிடம் வெளிப்படையாக காணப்பட்டது. மேற்கொண்டு எந்த விளக்கத்திற்கும் அவசியம் ஏற்படவில்லை.

**வசனம் 27.** விசுவாசிகள் அழைக்கப்படும்போது எந்த நிலையில் இருந்தார்களோ அந்த நிலையிலே நீடிக்கவேண்டும் என்ற அவருடைய பொதுவான கருப்பொருளில் பவுலின் திருமணமாகாதவர்களுக்கான அறிவுரைகள் பொருந்துகிறது. திருமணத்திற்கு பின்னர் கிறிஸ்தவரான ஒரு மனுஷன் அல்லது மனுஷி திருமணத்தை தொடரவேண்டும் மற்றும் மனைவி அல்லது கணவனிடமிருந்து **அவிழ்க்கப்பட வகைதேடக் கூடாது. மனைவி இல்லாதவனாயிருக்கிற** விசுவாசிகள் என்பது திருமணமே ஆகாதவர்கள், வாழ்க்கைத்துணையை மரணத்தின் நிமித்தம் இழந்தவர்கள், விவாகரத்து பெற்றவர்கள் போன்றவர்களை உள்ளடக்குகிறது. "இப்பொழுது உண்டாயிருக்கிற துன்பத்தினிமித்தம்," திருமணம் செய்யாதிருப்பது ஞானமான விஷயம். பொதுவாக ஆண்கள் திருமணத்திற்கான தொடக்கத்தை மேற்கொள்ளுகிறார்கள், ஆண்களை குறித்து அப்போஸ்தலர் சொன்னது சம அளவில் பெண்களுக்கும் பொருந்தும்.

**வசனம் 28.** பவுலின் "அபிப்பிராயம்" (7:25) என்பதின் அதிகார நிலை அவர் தொடர்ந்து சொன்னதில் தெளிவாக இருந்தது; இது ஒரு கட்டளை அல்ல. தேவன் தன்னை உண்மையுள்ளவர் என்று எண்ணியிருந்தபோதிலும், சிலர் அவருடைய பரிந்துரையைப் பின்பற்றாமலும் இருக்கலாம் என்ற சாத்தியத்தை அவர் ஏற்றுக்கொண்டார். பவுலுடைய ஆலோசனையை தள்ளிவிட்டு திருமணம்செய்ய தீர்மானம் செய்தவர்களுக்கு, அப்போஸ்தலர் எழுதியதாவது, **நீங்கள் பாவம் செய்யவில்லை**. அவருடைய அப்போஸ்தல அதிகாரம் அல்லது வேதவாக்கியங்களின் அதிகாரம் இதுபோன்ற தீர்மானங்களினால் சமரசம் செய்யப்படுகிறது என்று அவர் நம்பவில்லை. பவுல் தனது வாசகர்களுக்கு ஒரு ஞானமான தீர்ப்பு வழங்கி அவர்களின் ஆபத்தான சூழ்நிலையில் அவர்களுக்கு வழிகாட்டினார், ஆனால் இறுதி முடிவை எடுக்கும் அதிகாரத்தை

ஒவ்வொரு தனிநபரிடமும் விட்டுவிடுகிறார். இருப்பினும் அவருடைய ஆலோசனையில் அவர் உறுதியாயிருந்தார். ஒரு காரியத்தில் தங்கள் சொந்த மனச்சாட்சி சொல்வதை பின்பற்றிநடக்க கிறிஸ்தவர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கையில், திருமணமானவர்களுக்கு இவ்வுலக வாழ்க்கையில் துன்பங்கள் உண்டு என்பதில் பவுல் உறுதியாயிருந்தார். **அதற்கு நீங்கள் தப்பவேண்டுமென்றிருக்கிறேன்**, என்று அவர் தனது வாசகர்களுக்கு உறுதியளித்தார். திருமணம் பரிசுத்தமான வாழ்க்கை முறை என பவுல் பாராட்டினார்; அதே சமயத்தில் கிறிஸ்தவர்கள் தற்போதைய துன்பத்தின் நிமித்தம் திருமணத்திற்கு விலகியிருக்க பரிந்துரைத்தார். அவர் நியாயப்படுத்துவதாக தோன்றுவதென்னவெனில், மற்றொரு நபரிடம் அன்புசெலுத்த அர்ப்பணிப்பதின் நிமித்தம், ஒருவர் தேவனிடமிருந்து விலகிச் செல்வதற்கான அழுத்தங்களினால் பாதிக்கப்படக்கூடிய வாய்ப்பு உண்டு என்று அவர் நினைத்தார் (பார்க்கவும், 7:32-35ல் கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களை).

**வசனம் 29. இனிவரும் காலம் குறுகினதானபடியால், மனைவிகளுள்ளவர்கள் மனைவிகளில்லாதவர்கள்போல** இருக்க வேண்டும் என்று பவுல் சொன்னார். இக்காலத்தின் முடிவு விரைவில் வரவிருப்பதை அப்போஸ்தலர் எதிர்பார்த்திருக்கிறார் என்பதை இந்த வசனத்தின் முதல் பகுதி குறிப்பிடுகிறது. கர்த்தர் திரும்பி வரும் நாளைப் பற்றி எனக்கு தெரியும் என்று பவுல் சொல்லவில்லை, கிறிஸ்து தனது வாழ் நாளிலோ அல்லது அவருடைய வாசகர்களின் வாழ்நாளிலோ கிறிஸ்து வருவார் என்றும் அவர் போதிக்கவில்லை. கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தப்படுத்துதல் என்பதும் அவர் எப்போது வருவார் என்று முன்னுரைப்பதும் ஒன்றல்ல. எதிர்பார்ப்புடன் வாழ்வதென்பது அவருடைய வருகைக்கு ஆயத்தமாயிருப்பது. இந்த சகோதரர்கள் காலத்திலே அவர் வரலாம் என்று பவுல் அறிந்திருந்தார்,[18] ஆனாலும் இந்த நற்செய்தியை கொரிந்துவில் அவர் போதித்ததிலிருந்து பல நூற்றாண்டுகள் கடந்துவிட்டது.

பிரதானதூதரின் சத்தமும் தேவஎக்காள சத்தமும் அவர்களுடைய வாழ்நாளில் அவர்களை வரவழைக்கலாம் என்ற கருத்தை மனதிற்கொண்டு தொடக்க கால கிறிஸ்தவர்கள் வாழ்ந்தனர் (1 தெச. 4:15). பவுல், யாக்கோபு, மற்றும் பேதுரு ஆகியோர் தவறு செய்தார் களா? கர்த்தர் திடீரென்று தோன்றுவார் என்று அப்போஸ்தல கோட்பாடு கூறுகிறது, ஆனால் அப் போஸ்தலர்கள் ஒரு குறிப்பிட்ட நேரத்தை சொல்லவில்லை. கர்த்தருடைய வருகையின் எதிர்பார்ப்பு உலகத்தை ஒரு நல்ல இடமாக மாற்ற விசுவாச வாழ்வு, இரக்கம், மற்றும் நற்குணங்கள் போன்ற நற்கிரியைகளுக்கு அழைக்கிறது. கர்த்தருடைய வருகை சமீபமாயிருப்பதினாலே, முன்னொரு போதும்

இல்லாத அளவிற்கு உலகத்தைக்குறித்த ஒரு கண்ணோட்டத்தை கிறிஸ்தவர்கள் பெற்றிருந்தார்கள்.

"மனைவிகளையுடையவர்கள் இல்லாதவர்கள் போலிருக்க" வேண்டிய காலம் ஒவ்வொரு மணித்துளிகளிலும் நெருங்கிக் கொண்டிருந்தது. கொரிந்திய விசுவாசிகளுக்கு திருமணவாழ்க்கை குறித்து பவுல் கொடுத்த ஆலோசனை சற்று கடினமானதாக இருந்தாலும் உலகப்பிரகாரமான எல்லா விஷயங்களுக்கும் நிச்சயமாக முடிவு உண்டு என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டனர். கர்த்தர் திரும்பி வருவார் என்ற அறிவு அவர்கள் நடைமுறை வாழ்வின் சிந்தனையிலும் வாழ்க்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. விரைவில் காலம் நிறை வேறிவிடும் என்று அவர்கள் நம்பினர்; இது கிறிஸ்தவர்களிடம் எப்பொழுதும் இருந்தது. கொரிந் தியர்களில் சிலர் இவ்வுலக வாழ்க்கையின் விஷயங்களைப் பற்றிக்கொண்டிருந்தார்கள், ஆனால் பவுல் அவர்களுடைய கவனத்தை பரலோகத்தை குறித்த விஷயங்கள் மீது திருப்பினார். புறஜாதிகளுக்கான அப்போஸ்தலரைப் பொறுத்தவரை, கர்த்தருடைய வருகையை எதிர்பார்ப்பதற்கான ஒரே வழி அவர் விரைவில் வர எதிர்பார்க்க வேண்டும். ரிச்சர்ட் ஈ. ஓஸ்டர் (Richard E. Oster, Jr.) ஜூனியர் இவ்வாறு கூறினார்: "விசுவாசியின் உண்மையான சுய விவரம் ஒரு மறைவான உலகின் உண்மைகளிலும் மதிப்பிலுமே முதலீடு செய்யப்படுகிறது, ஏனெனில் அந்த உலகம் மட்டுமே நித்தியமானது, அதில் அழியக்கூடியவைகள் ஜீவனாலே விழுங்கப்படும்"[19] (2 கொரி. 5:4).

**வசனம் 30.** கொரிந்திய விசுவாசிகள் தேவனை அறிந்து கொண்ட அளவில் இரட்சகரின் வருகையை எதிர்பார்ப்பதினால், திருமணம் மற்றும் உலகபிரகாரமான விஷயங்களை அவர்கள் மறு மதிப்பீடு செய்வார்கள். தப்பிச்செல்வதற்கான ஒரு மன நிலையை அப்போஸ்தலர் பரிந்துரைக்கவில்லை; நான்கு சுவர்களுக்குள் கூடிவரவும், கர்த்தருடைய வருகை மட்டும் பாடல்களை பாடிக்கொண்டிருக்கவும் சகோதரர்களுக்கு அவர் உபதேசிக்க வில்லை. ஜீவன் இருக்கும்போது, தேவனுடைய ஜனங்கள் **அழுகிறார்கள்**, **சந்தோஷப்படுகிறார்கள்**, **வாங்குகிறார்கள் மற்றும் கொள்ளுகிறார்கள்**; ஆனால் அன்றாட வாழ்வின் இமாலய விவகாரங்கள் புதிய இலக்கை நோக்கிச் செல்கின்றன. தேவன் உலகத்தை ஒரு உச்ச நிலைக்கு நேராக நடத்திச்செல்கிறார் என்று கிறிஸ்தவர்கள் எண்ணுகிறார்கள். அதுவரையிலும், உலகம் வாழ்வை கடினமாக்கும், கொரிந்துவிலுள்ள விசுவாசிகளுக்குச் செய்ததுபோல. அப்போஸ்தலர் முன்னறிந்த குடும்ப வாழ்வின் சிரமங்களை மனதிற்கொண்டு, கிறிஸ்தவர்கள் தவிர்க்க வேண்டிய ஒன்று திருமணம் என்ற சிக்கலான தீர்ப்பை அவர் அளித்தார். பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளின் எச்சரிக்கைகளில் காணப்பட்ட அதேவிதமான அவசரத்தை பவுலின் வார்த்தைகள்

பிரதிபலிக் கின்றன. கர்த்தருடைய நாள் அவர்கள்மேல் இருந்தது.

**வசனம் 31.** பவுல் மேலும் கூறியதாவது, **இவ்வுலகத்தை அனுபவிக்கிறவர்கள் அதைத் தகாதவிதமாய் அனுபவியாதவர்கள் போலவும் இருக்க வேண்டும்; இவ்வுலகத்தின் வேஷம் கடந்து போகிறதே**. கொரிந்துவில் உள்ள திருமணமாகாத விசுவாசிகள் திருமணத்தின் அறிவுரையை சிந்தித்துக் கொண்டிருக்கிறபோது, உலகின் நிலையற்ற தன்மையை பவுல் அவர்களுக்கு நினைப்பூட்டினார். அப்போஸ்தலர் தேர்ந்தெடுத்த கிரேக்க வினைச் சொல்லின் காலம் (παράγει, *paragei*, "கடந்து செல்லும்") செயலின் முன்னேற்றத்தைக் குறிக்கிறது. இதன் சிந்தனை உலகம் அழிந்துவிடும் என்பதல்ல, ஆனால் அதற்குரிய செயல்முறை ஏற்கனவே தொடங்கி விட்டது. பாவமும் தேவனுக்கு விரோதமான கலகமும் ஒரு பலூனுக்கு காற்றடைப்பது போன்றது. மனுக்குலத்தின் பாவத்திற்காக மரிக்கும்படி தேவன் அனுப்பிய இரட்சகரை ஏற்றுக்கொள்ள அநேகர் மறுத்தது அழுத்தத்தை அதிகரித்தது; உடைந்து போவதற்கான வேளை வெகு தூரத்தில் இல்லை என்பது தெளிவானது. "இந்த உலகத்தின் வடிவம் கடந்து போகிறது" என்பதைக் விளக்கிக்காட்டுகிறது ஒரு சுற்றுப்பார்வை. "உலகமும், அதின் இச்சையும் ஒழிந்துபோம்," என்று யோவான் பிரகடனம் செய்தார், "ஆனால் தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்" (1 யோவான் 2:17). பவுல் பயன்படுத்திய அதே வினைச்சொல்லும் அதே காலமும் இங்கு யோவானால் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## "கர்த்தருக்கென்று உங்களை அர்ப்பணியுங்கள்" (7:32-35)

**32நீங்கள் கவலையற்றவர்களாயிருக்க விரும்புகிறேன். விவாகமில்லாதவன் கர்த்தருக்கு எப்படிப் பிரியமாயிருக்கலா மென்று, கர்த்தருக்குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறான். 33விவாகம் பண்ணினவன் தன் மனைவிக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாமென்று, உலகத்திற் குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறான். 34அது போல, மனைவியானவளுக்கும் கன்னிகைகளுக்கும் வித்தியா சமுண்டு. விவாகமில்லாதவள் சரீரத்திலும் ஆத்துமாவிலும் பரிசுத்தமாயிருக்கும்படி, கர்த்தருக்குரியவைகளுக்காகக் கவலைப் படுகிறாள்; விவாகம்பண்ணினவள் தன் புருஷனுக்கு எப்படிப் பிரிய மாயிருக்கலாமென்று, உலகத்திற்குரியவைகளுக்காகக்கவலைப் படுகிறாள். 35இதை நான் உங்களைக் கண்ணியில் அகப்படுத்தவேண்டுமென்று சொல்லாமல், உங்களுக்குத் தகுதியாயிருக்குமென்றும், நீங்கள் கவலையில்லாமல் கர்த்தரைப்**

**பற்றிக் கொண்டிருக்கவேண்டுமென்றும், உங்கள் சுயபிர யோஜனத்துக்காகவே சொல்லுகிறேன்.**

**வசனம் 32.** தனது வாசகர்கள் கூடுமான வரையில் கவலையின்றி இருக்க பவுல் விரும்பினார். "தற்போதைய துன்பம்" (7:26) என்பது திருமணமானவர்களை துன்புறச்செய்யும்; மட்டுமல்ல அது தங்களுக்கு அன்பானவர்களையும் துன்புறச்செய்யும். திருமணமாகாதவருக்கு குடும்பப்பிரச்சனைகள் இல்லாதபடியால் அவர் தேவனைப் பிரியப்படுத்துவதில் கரிசனை காட்டுவார். கொரிந்துவில் உள்ள கிறிஸ்தவர்களின் மிக மோசமான சூழ்நிலைகள் கணவர்களும் மனைவிகளும் ஒருவருக்கொருவர் செய்ய வேண்டிய சாதாரண கரிசனைகளை மேலும் சிக்கலாக்குகின்றன என்று அப்போஸ்தலர் தெரிவித்தார். திருமணமாகாத கிறிஸ்தவர்கள் திருமணம்செய்துகொள்ளாமல் இருப்பது நல்லது என்று பரிந்துரைக்க அவர் கொடுத்த காரணம் என்னவெனில் **நீங்கள் கவலையற்றவர்களாயிருக்க** நான் **விரும்பு கிறேன்** என்பதே. கணவர்களும், மனைவிகளும் ஒருவருக்கொருவர் கரிசனை காட்டுவது இயற்கையான மற்றும் சரியான ஒன்று. ஒரு கணவன் அல்லது மனைவியின் வாழ்க்கை ஆபத்திலிருந்தால், அல்லது ஒருவரின் வாழ்க்கைத்துணை சிறைத்தண்டனையோ அல்லது சித்திரவதையை சந்தித்தால், அவ்வித துன்பத்திலிருந்து தன்னுடைய வாழ்க்கைத்துணையை விடுவிக்கும்படி கிறிஸ்துவை மறுதலிப்பதற்கான சோதனையானது அதிகமானதாக இருக்கலாம்.

சில மத பிரிவுகளில், கொரிந்தியருக்கு எழுதின கடிதத்தில் பவுல் திருமணத்தை ஏற்க மறுத்த காரணங்களுக்காக குருமார்கள் திருமணம் செய்து கொள்ளவில்லை. முதலாவது, திருமணமாகாதவர் குடும்ப கவனச்சிதறல்கள் இல்லாமல் ஊழியத்திற்கென்று தன் முழு சக்தியையும் கொடுக்க முடியும் என்ற நம்பிக்கை. இரண்டாவது, பாலியல் உறவில் இயல்பாகவே இச்சையுடையது ஆகையால் அது பாவமானது என்ற சிலருடைய நிலை. இரண்டு அனுமானங் களையும் பவுல் ஆதரிக்கவில்லை. துறவு வாழ்க்கையை முன் வைப்பவர்கள் முதல் வாதத்தை ஆதரிக்க 7:32ஐ பயன் படுத்துகிறார்கள், ஆனால் முழுநேர குருத்துவத்திற்கு ஆதரவாக பவுலின் மொழி நடை அமையவில்லை. அவர் அளித்த ஆலோசனை கொரிந்துவிலுள்ள எல்லா கிறிஸ்தவர்களுக்கும் வழங்கப்பட்ட ஒன்று. மேலும், சபையை அச்சுறுத்திய அசாதாரணமான கஷ்டத்தை கருத்தில் கொண்டு வழங்கப்பட்டது.

**வசனம் 33.** பவுலின் கடிதங்களில், "உலகம்" (κόσμος, *kosmos*) என்ற வார்த்தை பெரும்பாலும் இக்கால தீமைகளை குறிப்பிடுகிறது (காண்க எபே. 2:2). கிறிஸ்துவை எதிர்த்து நிற்கிற அனைத்தையும் குறிப்பிட "உலகம்" என்ற வார்த்தையை யோவான் அடிக்கடி பயன் படுத்தினார்

(காண்க யோவான் 8:23). மேலும் பொதுவாக, "உலகம்" என்னும் வார்த்தை அதில் வாழும் மக்களை குறிப்பிட பயன்படுத்தப்படுகிறது; ஆனால் **விவாகம்பண்ணினவன் தன் மனைவிக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாமென்று உலகத்திற் குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறான்** என்று பவுல் சொன்ன போது, ஒருவருடைய வாழ்க்கைத் துணையையும் குடும்பத்தையும் மனதிற்கொண்டே உலகம் என்ற வார்த்தையை பயன்படுத்தினார். "உலகத்தின் காரியங்களுக்கான" கவலை என்பது இரண்டாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் ஸ்டோயிக் தத்துவவாதியான எபிக்டெட்டஸின் விவாதத்திற்குரிய கருப்பொருளாக காணப் பட்டது. ஒரு நீண்ட பாராவில், திருமணமான மனிதனைச் சுற்றியுள்ள கவனச்சிதறல்களை சுட்டிக் காட்டி, அவர் பின்வருமாறு எழுதினார்,

> … அவர் தனது மாமனாருக்கு சில சேவைகளை செய்ய வேண்டும், தனது மனைவியின் மற்ற சொந்தக்காரர்களுக்கு, மனைவிக்கு; கடைசியாக, அவர் தனது தொழிலால் விரட்டப்படுகிறார், தனது குடும்பத்தினருக்கு தேவையானவற்றை கொடுத்து சேவைசெய்யும் பணிப்பெண்ணை போல … குழந்தைக்கு வெந்நீர் குடிக்கக் கொடுக்க குவளை வாங்கவேண்டும், அக்குழந்தையை குளிக்க வைக்கவேண்டும்; மனைவிக்கு குளிர் அடிக்கும் போது கம்பளி வாங்கவேண்டும், எண்ணெய், கட்டில், கப் (அதிக அதிகமான எண்ணற்ற பாத்திரங்களை வாங்கவேண்டும்); அவனுடைய மற்ற அலுவல்களையும், மற்ற கவனச்சிதறல்களையும் குறித்து பேசவேண்டிய அவசியமில்லை.[20]

இவ்வித கவனச்சிதறல்களை கருத்திற் கொண்டு, எபிக்டெட்டஸ் பரிந்துரை செய்ததாவது, தத்துவ மேதைகளாவது திருமணம் செய்யாமல் இருக்க வேண்டும்.

எபிக்டெட்டஸ் பட்டியலிட்ட கரிசனைகளும் பவுலுடைய கரிசனைகளும் ஒன்றல்ல, ஆனால் அவைகள் ஒத்தவை. பவுல் முன்கண்ட உடல் ரீதியிலான மற்றும் உணர்வுபூர்வமான துன்பங் களுக்கு அடுத்தபடியாக அவைகள் காணப்படுகிறது. எபிக்டெட்டஸ் போன்ற தத்துவமேதை பெற்ற அழுத்தங்களைக்காட்டிலும் கொரிந்துவில் உள்ள திருமணமான கிறிஸ்தவர்களுக்கு குடும்ப விஷயங்கள் அதிக அழுத்தத்தை கொடுத்தது. கிறிஸ்துவை அறிக்கையிடுதல் வாழ்க்கைத்துணைக்கும் குழந்தைகளுக்கும் விளைவுகளை எற்படுத்தின. கணவர்களும் மனைவிகளும் கிறிஸ்துவை அறிக்கையிடுவதற்கும், அன்பானவர்களை பாது காப்பதற்கும் இடையில் கடினமான தெரிவுகளை செய்யும்படி கட்டாயப்படுத்தப்படுவார்கள் என்று பவுல் அறிந்திருந்தார். உதாரணமாக, பவுலுக்கு திருமணமாகியிருந்தால், அப்போஸ்தல ஊழியமும் பாடுகளும் (காண்க 2 கொரி. 11:22-29) அவருடைய குடும்ப வாழ்க்கையை நிச்சயமாக பாதித்திருக்கக்கூடும்.

**வசனம் 34.** 7:33-34ல் பயன்படுத்தப்பட்டுள்ள "கவலைப்படுதல்" (μεριμνᾶ, *merimna*) என்ற வினைச்சொல் ஒருமையில் தரப்பட்டுள்ளது.[21] ஒருவர் கூட்டு பொருள் (அதாவது, "திருமணமாகாத பெண் மற்றும் கன்னிகை") பன்மை வினைச்சொல் என்று எதிர்பார்க்கலாம் என்றாலும், இந்த சந்தர்ப்பத்தில் அது பன்மை அல்ல. "திருமணமாகாத பெண்" என்பதின் விளக்கச்சொல்லாக "கன்னிகை" பயன் படுத்தப்பட்டுள்ளது என்று புரிந்து கொள்ளலாம். பொருள் என்னவெனில் "திருமணமாகாத பெண், அதாவது, கன்னிகை, கவலைப்படுகிறாள்." இருப்பினும், அது பொருந்தாத "மற்றும்" (καί, *kai*) வார்த்தையை தருகிறது. பொருள் வினை ஒப்பந்தம் கிரேக்க மொழியில் ஆங்கிலத்தில் உள்ளது போல இல்லை என்று விளக்கம் கொடுக்கலாம். கிரேக்க மொழியில் இப்படி அர்த்தம்கொள்ளலாம் "திருமணமாகாத பெண் (மற்றும் கன்னிகையும் கூட) கவலைப்படுகிறாள்." இந்த வாக்கியத்தின் ஒரு நல்ல புரிந்து கொள்ளுதலை NASB தருகிறது: விவாகமில்லாதவள், மற்றும் கன்னிகை, **உலகத்திற்குரியவை களுக்காகக் கவலைப்படுகிறாள்**. "விவாகமில்லாதவள் அல்லது கன்னிகை கவலைப்படுகிறாள் ..." என்று NIV மொழிபெயர்க்கிறது. பவுல் இரண்டு பிரிவு பெண்களை குறிப்பிடுகிறார் என்று இரண்டு மொழிபெயர்ப்புகளும் குறிப்பிடுகிறது. ஒரு பிரிவில் உள்ள பெண்கள் திருமணம் ஆகி பின்பு கணவர் இறந்திருக்கலாம் அல்லது விவாகரத்து பெற்றவர்கள், மற்ற பிரிவில் உள்ள பெண்கள் இதுவரையிலும் திருமணமே ஆகாதவர்கள். இந்த விளக்கம் இப்பின்னணியத்திற்கு மிகவும் பொருத்தமாக உள்ளது. திருமண மாகாதவர்களின் ஒரு பிரிவே கன்னிகைகள், ஆனால் அப்பிரிவினர் சிறப்பு கவனஈர்ப்பு பெறுகிறார்கள்.

பவுலின் விவாதம் என்னவெனில் ஒரு நபர் - ஆண் (7:33) அல்லது பெண் (7:34) - திருமணம் ஆன பின்னர் தன்னுடைய வாழ்க்கைத்துணைக்கும் குழந்தைகளுக்கும் உதவிசெய்ய தன்னுடைய சக்தியையெல்லாம் செலவிடவேண்டும். அவிசுவாசி யான வாழ்க்கைத்துணை கிறிஸ்தவரிடம் குடும்பத்திற்கான கரிசனைகளை அதிகரிக்கும்போது, அவன் அல்லது அவள் கர்த்தருக்குக் கீழ்ப்படிதலில் இருந்து கவனம் விலகிச்செல்ல வாய்ப்புண்டு. விசுவாசிகள் "உலக காரியங்களைக்குறித்து" பொதுவாக கவலையற்றவர்களாக இருக்க வேண்டும் என்று பவுல் விவாதம் செய்யவில்லை. யூதேயாவில் உள்ள ஏழைகளுக்கென்று அவர் செய்துகொண்டிருந்த பணவசூல் (1 கொரி. 16:1) அவர் உலக காரியங்களை குறித்த கரிசனை உடையவராக இருந்தார் என்பதற்கான ஒரு செயல்விளக்கம் ஆகும். மாறாக, அவர் சொன்னதாவது, கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிதல் என்பது, **சரீரத்திலும் ஆத்துமாவிலும்** பரிசுத்தமாயிருப்பது, கிறிஸ்தவரின் தலையாய கவலையாக இருக்க வேண்டும். அந்த இலக்கிலிருந்து கவனத்தை

திருப்பும் எதையும் விட்டுவிலகவேண்டும்.

**வசனம் 35.** திருமணம் கொரிந்திய கிறிஸ்தவர்கள் வாழ்ந்த சூழ்நிலைகளுக்கு பிரத்யேகமானது என்று எண்ணிய திருமணமாகாதவர்களை பற்றியதே பவுல் கொடுத்த அறிவுரைகள் ஆகும். அந்த காரணத்திற்காக, அவர் எச்சரிக்கையுடையவராக இருந்தார். 7:25ல் இப்பொருளை குறித்து உரையாடிய பின்னர், அவர் சொன்னார், "தற்போதைய துன்பத்தின் நிமித்தம் இது நல்லது என்று *நான் எண்ணுகிறேன்*" (7:26; வலியுறுத்தல் சேர்க்கப் பட்டிருக்கிறது). அவருடைய சொற்றொடர் மாற்றமுடியாத ஒரு நிலையை குறிப்பிடவில்லை. பவுல் மேலும் கூறியதாவது, **இதை நான் உங்களைக் கண்ணியில்** [βρόχον, *brochon*] **அகப்படுத்த வேண்டுமென்று சொல்லாமல், … உங்கள் சுய பிரயோஜனத்துக்காகவே சொல்லுகிறேன்**. இந்த சொற்றொடரின் கூடுதலான வண்ணமயமான மொழி பெயர்ப்பு என்னவெனில், "உங்களைச் சுற்றி ஒரு தூக்குக்கயிறு போடுவது அல்ல."

கோட்பாட்டின் முக்கிய அம்சங்கள் (உதாரணமாக, கலா. 5:1-3) அல்லது ஒழுக்கநெறி (உதாரணமாக, 1 கொரி. 6:9, 10) பிரச்சனைக்கு உட்படும் போது, பவுல் சமரசம்செய்வதில்லை. இருப்பினும், இந்தசந்தர்ப்பத்தில் விசுவாசிகள் ஞானமாக சுவிசேஷத்திற்கு உட்பட்ட கொள்கைகளை தங்கள் சூழ் நிலைகளுக்கு ஏற்றவாறு கடைப்பிடிக்க வேண்டும் என்று ஒரு தனிநபருடைய சூழ்நிலைகள் வலியுறுத்துகிறது என்று அவர் உணர்ந்தார். அதைக் கருத்தில்கொண்டு, கொரிந்துவில் உள்ள கிறிஸ்தவர்களுக்கு தனது சிறந்த ஆலோசனையை வழங்கினார். திருமணத்தைக் குறித்து சிந்தித்துக்கொண்டிருக்கிற ஒரு தனி நபருடைய மனச்சாட்சியே இந்த விஷயத்தில் இறுதி நடுவர் என்று அவர் தெளிவுபடுத்தினார். **தகுதியாயிருப்பதை செய்யவும் … கவலையின்றி கர்த்தரைப் பற்றிக்கொண்டிருக்கவும்** அப்போஸ்தலர் தன் வாசகர்களை வலியுறுத்தினார்.

## "இந்த விஷயத்தில், நீங்கள் விரும்புகிறபடி செய்யவும்" (7:36-38)

